பதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது. உ விரோதிவரு (1889) ஆவணியீ உஅ-உ ஆரம்பமானது.

பத்திரிக்கிரயம்.
வருஷத் தொகை:
யாழ்ப்பாணப் பட்டினம் ரூ 5·00
இங்கிலீசும் தமிழும் 9·00
இலங்கை இந்தியா ரூ 8·00
இங்கிலீசும் தமிழும் 12·00
தூரதேசப்பகுதி ரூ 9·00
இங்கிலீசும் தமிழும் 13·00
முற்பண மனுப்பினு லன்றிக் கவனிக்கப்படா.

# இந்துசாதனம்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும், ஆன்ற பெருமை தரும்".

விளம்பரவிகிதம்.
முதன் முறைக்கு:
,, ஒருகலம் ரூபா 10·00
,, அரைக்கலம் ,, 5·50
,, கால்கலம் ,, 4·00
அடுத்த முறைகட்கு மேற்படி விகிதச் சரிபாதி.
☞ விளம்பரங்கள் முற்பண மனுப்பினு லன்றிக் கவனிக்கப்படா.

"சிற்பூதக் கருமிஅ மணர்ச்சி தேக்கல் இலம்பூதக இகமக மங்களோங்கப், பார்பூதக புறச்சமய இருளை நீக்கப் பரம்பூதக சைவநெறியோரா தாக்கப், பேர்பூதக இவணக்கத இனிது ஆக்கப் பிறைபூதக சடைமவுலிப் பிரானார் தந்த, வார்பூதக வரிவிர்கை சோதிவேள் நேரு மகர்பூதக விநாயகன்றன் வணங்கி வாழ்வாம்"

"வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல்லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

புத்தகம்—சஎ } யாழ்ப்பாணம்:— யுவவரு சித்திரைமீ கஉஉ ( 1935 ஏப்ரல் 25 வியாழக்கிழமை ) { இலக்கம்—ரு

## கதிர்காம வரலாறு.

### சனங்கள் பயபக்தியோடு வழிபடும் தெய்வம்

(மிஸ்ரர் C. D. F. அபயக்கோன் எழுதியது.)

வருடப்பிறப்பு உற்சவம்.

வருடப்பிறப்புத் தினத்தன்று கதிர்காம ஸ்தலத்திலே விசேஷ திருவிழா நடைபெறும். அந்தச் சமையத்தில் இந்துக்கள் சிங்களர் மாத்திரமல்லாமல் இஸ்லாமானவர்களும் அங்கே வணக்கத்திற்குச் செல்கின்றார்கள். இஸ்லாமானவர் அங்குப்போவது தங்கள் காதர்நபி என்பவரைத் தொழுவதற்காம். சபமுகூர்த்தத்திற் பிராமணரும் "கப்புறளை"மாரும் கந்தகுமார யந்திரத்தை மகா தேவாலயத்திலிருந்து எழுந்தருளச்செய்து கணேசர்ஆலயத்தையும் பெருமாள் கோயிலையும் வலமாகச் சூழ்ந்துபோய் வள்ளியம்மன்கோயிலைச் சேருவர். அந்தச் சமையத்திற் பல்லாயிரக்கணக்கான குகபக்தர்கள் தங்கள் தலையில் கற்பூரச்சட்டியை எரிந்தபடி சுமந்துகொண்டு ஹரோ-ஹரா என்ற கோஷத்தோடு சுவாமியை நாற்புறமுஞ் சூழ்ந்து செல்லுவர். பலவகையான வாத்தியங்களும் ஒலிக்கப்படும். அநேகர் தேவாரங்களையும் தோத்திரங்களையும் ஒதிக்கொண்டு போவர். வள்ளியம்மன் கோவிலிலிருந்து சுவாமியை, பிராமணரும் "கப்புறளை"மாரும் "பத்தினி" தேவாலயத்திற்கு எழுந்தருளச் செய்து, அங்குச் சில கிரியைகள் செய்த பின் பழையபடி மகாதேவாலயத்திற்கு எழுந்தருளச் செய்வர். பின்னர் இலங்கையின் கங்காதீர்த்த மெனப்படும் மாணிக்க கங்கையில் தீர்த்தம் நடத்தி எல்லோரும் அதில் மூழ்குவர். அவ்வளவோடு வருடப் பிறப்பு உற்சவம் பூர்த்தியாகின்றது. வேடுவர்களும் தங்கள் மகளாகிய வள்ளியம்மையைக் குமாரதெய்வத்திற்கு மணஞ்செய்து கொடுத்ததாகிய தொடர்பையிட்டு அத்தினத்தன்று வந்து வழிபடுவார்கள்.

தலத்தின் பழைய வரலாறு:

விஜயனுடைய காலத்திற்கு முந்தியே இலங்கையின் தென்மேற்குத் திசையில் மகேந்திரகிரி யெனப்படும் ஒரு பெரிய தீவு இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. அந்தத் தீவிலுள்ளோர் அக்காலத்தில் மிகவும் சீர்திருந்தியவர்களென்றுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மகேந்திரகிரியைத் தலைநகராகக்கொண்ட சூரன் கந்தக்கடவுளின் அன்பர்களாகிய தேவர்கள்சிலரை மகேந்திரகிரியிற் சிறைவைத்தானென்றும், கந்தக்கடவுள் அந்தச் சூரனுடன் போர்செய்து தேவர்களைச் சிறைமீட்டு வடதிசைநோக்கிச் செல்லும் மார்க்கத்திற் கதிரமலையில் வள்ளிநாயகியைக் கண்டு காதலித்து, பின் மணஞ்செய்துகொண்டாரென்றும் ஒரு சரித்திரங் கூறுகின்றது.

குமாரக் கடவுள் கைலாயத்தினின்றும் எழுந்தருளி வந்து திருக்கோணமலையைச் சேர்ந்த சுவாமிமலையிலே தங்கினரென்றும், சுவாமிமலை தமக்கு உகந்த தலமாகாமை கண்டு தமது வேற்படையைச் சுழற்றி அந்தாத் தெறிய, அது பலகாததூரம் காற்றென விரைந்து சென்று கதிர்காமத்துள்ள ஒரு குன்றில் இறங்கியதென்றும், அதன்பின் அந்தக் கடவுள் அங்கு வந்து தங்கி வள்ளிநாயகியை மணந்தாரென்றும், அச் சமையத்தில் நாரத முனிவரே மணச்சடங்குகளைச் செய்தாரென்றும் பிறிதொரு வரலாறு உண்டு. இலங்கையின் பூர்வீக சரித்திரத்தை யெழுதிய டக்டர் S.C போல் என்பவர் கதிர்காமத்தலம் விஜயன் காலத்திற்கு மிக முற்பட்டதென வரைந்திருக்கின்றார்.

கதிர்காமதல மகத்துவம்.

இலங்கையின் தென்னிராச்சியமாகிய ருகுணையிலுள்ள சிங்கள அரசர்கள் கதிர்காமத்தையே தங்கள் புராதன புண்ணிய தலமாக மதித்து வந்தார்கள். கிறீஸ்துவுக்குமுன் 568-ம் ஆண்டில் புத்தர் இலங்கைக்கு வந்தபோது, மகாசேனன் என்னும் அக்காலத்து அரசன் கதிர்காமக் கோவிற் றிருப்பணியை நடத்திக்கொண்டிருந்தானென்று "மகாவம்ஸம்" என்னும் பழைய சரித்திர நூல் கூறுகின்றது. கிறீஸ்துவுக்குப் பின் 661-ம் ஆண்டில் ருகுணை அரசனாகிய அகபோதியென்பான் கதிர்காமக்கோவிலைப் புதுக்குவித்தானென்றும் அக்கோயில் 400 வருடங்களாக நிலவியதென்றும் பின்னர் சோழர் இந்தியாவிலிருந்து படையெடுத்து இலங்கைக்கு வந்தபோது அக்கோவிலை இடித்துவிட்டார்களென்றும் அந்த மகாவம்ஸத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

சிங்களருக்குரிய ஒரு செய்யுள்நூல் கதிர்காமத்தின் பிந்திய வரலாற்றைக் கீழ்வருமாறு கூறுகின்றது: துஷ்டகெமுனு என்னும் சிங்கள இராசகுமாரன் தன் பிதா தடுக்கவும் கேளானாய், அக்காலத்து அநுராதபுரத்தை இராஜதானியாகக் கொண்டு ராச்சியபரிபாலனஞ்செய்த சோழவம்ஸத்து அரசனாகிய எல்லாளனுடன் போர்புரியும்படி திசைமகருமாகிலிருந்து புறப்பட்டு வரும்போது இராக்காலமாதலும் மாணிக்ககங்கையின் தீரத்திலே ஒரு இடத்திற் றங்கினான். அப்பொழுது கந்தக்கடவுள் ஒரு சந்நியாசிபோற் சொப்பனத்தில் அவ்வரசகுமாரன் முன்னர்த்தோன்றி "நீ உன் பகையரசனை வெல்லுவாய்; வென்றபின் இக்கதிரத்திலுள்ளதாகிய இந்தத் தானத்தில் எமக்கொரு கோயில் அமைக்குதி" என்று சொல்லியருளி மறைந்தனர். கெமுனு விழித்தெழுந்து தான் கண்ட கனவை எண்ணி மகிழ்ச்சியடைந்து குறித்த தானத்தில் தன்னுடைய வேலாயுதத்தை நாட்டி, உடனே ஒரு சிறு குடிலையும் அமைத்துவிட்டு அநுராசபுரத்தை நோக்கித் தன் பரிவாரத்தோடு சென்றான். பின்னர் நடந்த யுத்தத்திலே கெமுனு எல்லாளமகாராசனைக் கொன்று தானே அரசனாகி மீண்டுவந்து கதிர்காமத் திருக்கோவிலைப் பெரிதாகக் கட்டுவித்து முடித்தான். இந்தத் தொடர்பு பற்றியே சைவர்கள் மாத்திரமல்லாமல் பௌத்தர்களும் ஆயிரக்கணக்காகச்சென்று புதுவருடப்பிறப்பன்று நடக்கும் திருவிழாவைத் தரிசிக்கிறார்கள்.

கதிர்காமத்தைக் கொள்ளையடிக்க முயன்றமை.

அக்காலந் தொடக்கம் இற்றைவரையிற் கதிர்காமத்தலத்திற்கு எவராலும் எவ்வகையான இடையூறுஞ் செய்யமுடியாமலிருக்கின்றது. பறங்கிய சரித்திர நூலாசிரியராகிய றிபீறியோ என்பவர் எழுதிய சரித்திர நூலிற் கதிர்காம விஷயமாகப் பின்வரும் வரலாறு கூறப்பட்டிருக்கிறது:

"1642-ம் ஆண்டில் காஸ்பர்-டி-பிகுறப் எனப்படும் பறங்கிய அதிகாரி யொருவன் இரண்டாயிரம் பேர் கொண்ட பரிவாரங்களுடன் கதிர்காமத் தலத்திற் கொள்ளையடிக்க வேண்டுமென்னும் பொல்லாத நோக்கங்கொண்டு புறப்பட்டுப் போனான். அவனுக்கு வழிகாட்டிச் சென்றவர்கள் சிங்களராவர். கதிர்காமத்தலத்திற்கு ஒரு மைல் தூரம் மாத்திரமிருப்ப இவர்கள் போகும்போது, வழிகாட்டிகளாகிய சிங்களர் அத்தனைபேருக்கும் பயங்கரமான பைத்தியம் உண்டாய்விட்டது. அதனைக் கண்ட பறங்கிக் கள்வனும் அவன் பரிவாரங்களும் பெரும் பயங்கொண்டாராய், சரீரமும் மனமும் நடுங்க, வந்த வழியே மீண்டு ஓடிவிட்டனர்."

றபேர்ட் நொக்ஸ் என்பவர் கதிர்காம விஷயமாக எழுதியவிடத்து "கந்தக்கடவுளுக்குக் கோபமுண்டாதல் அயலிலேயுள்ள ஊர்களெல்லாம் விளைவில்லாமற் போய்விடும்; உப்பு அள்ளுவதற்குச் செல்லுவார் எல்லாரும் கந்தசாமிக்குக் காணிக்கையிட்டு வழிபாடு செய்துகொண்டே போவார்கள்; தமிழ் அரசனுக்கு மாறாய் அக்காலத்திற் போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்கும் துணைபுரிந்த சிங்களரும் கதிர்காமத் தெய்வத்திற்குப் பயந்து அரசனுக்கு விரோதமாகச் செல்லார்கள்" எனறு கூறியிருக்கிறார்.

அந்தெய்வத்தின் மகத்துவம்.

கந்தசுவாமி சிவமாகவும் சத்தியாகவும் குமாரனாகவும் பாவித்து வணங்கப்படுகின்றார். தமிழ் நூலாகிய கைலாய மாலையில், கதிர்காமத் தெய்வத்திற்குப் பின்வரும் நாமங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன: முருகன், திருமான்மருகன், தேவசேனாதிபதி, அசுராந்தகன், குகன், குழகன், குமரன், முதலியனவாம். மேலும் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டமையாற் கார்த்திகேயன் என்றும், சிவனுடைய கண்ணிற் றோன்றியமையால் சிவநேத்திரசுதன் என்றும், கங்கையிற் சஞ்சரித்தமையினாற் காங்கேயன் என்றும் அத்தப் பெருமான் அழைக்கப்படுகின்றார். ஆறுமுகன், கந்தசாமி, சண்முகன், சுப்பிரமணியன், சிவனன்னபரம் முதலிய இந்நாமங்களும் கதிர்காமத் தெய்வத்தைக் குறிப்பனவாகும்.

ஏனைய கோயில்கள்.

மாணிக்ககங்கை சூழ்ந்து பாயப்பெற்ற கதிர்காமத்திலே பிரதானமான கோயில்கள் ஒன்பதுண்டு. (1) மகாதேவாலயம் (2) வெள்ளரசுக்கோயில் (3) கணேசர்கோயில் (4) பெருமாள்கோயில் (5) தெய்வயானையம்மன் கோயில் (6) கண்ணகையம்மன் கோயில் (7) வள்ளியம்மன்கோயில் (8) முத்துலிங்கசாமிகோயில் (9) மகமதியருடைய பள்ளிவாசல் என்பன. மகாதேவாலயத்திலே இரு பாகங்களுள்ளன. மூலஸ்தானம் தரிசனமண்டபம் என்னும் இவ்விரு பாகங்களுள் தரிசனைக்குச்செல்வோர் அந்த மண்டபத்திலேயே நின்று தரிசித்தல்முடியும். மூலஸ்தானத்திலேயே கதிர்காம இரகசியமெனப்படும் யந்திரம் இருக்கின்றது. கோவிலின் புறச்சுவர்களிலே தெய்வங்களின் சித்திரங்களும் அசுர ராக்கதர்களுடைய சித்திரங்களும் வரையப்பட்டிருக்கின்றன. அங்குள்ள அரசமரம் அநுராசபுரத்திலுள்ள வெள்ளரசின் கிளையென்று சொல்லப்படுகின்றன.

இவைகளை விட இன்னும் சில ஆலயங்கள் கதிர்காமத் தலத்தின் அயலிலேயுள்ளன. கந்தசுவாமி வள்ளிநாயகியைச் சந்தித்த இடத்தில் மாணிக்கப்பிள்ளையார் கோவில் இருக்கிறது. அதற்கொரு மைல் தூரத்தில் வள்ளியம்மன் தினைமா அரைத்த கல்லுங் காணப்படுகின்றது. பத்தினி கோயிலைச் சேர்ந்த தலங்கள்மாத்திரம் ஆறு உண்டு. இனி, பைரவர் மலையும் ஒன்று உண்டு; அந்தக் கோயிலிலுள்ள பைரவருக்கு ஸ்ரீவிக்கிரமராசசிங்கன் வருடத்திற்கொருமுறை காணிக்கையிட்டுவந்ததாகச் சொல்லப்படுகின்றது. கதிர்காமத்திலுள்ள ஏழுமலைகளுள் மிக உன்னதமான மலை குறித்த தலத்திற்குத் தென்கிழக்குப் புறமாக 3 மைல் தூரத்திலிருக்கிறது. அந்த மலையிற் கந்தக்கடவுள் உவந்திருப்பதாகச் சொல்லப்படும். அது "வேதஹித்திய கண்டி" என வழங்கும். மகாதேவாலயத்திலுள்ள ஒரு சிறு மண்டபத்தில் ஈசுவரனுடைய பாதரட்சைகள் வைத்துப் பூசிக்கப்படுகின்றன

கதிர்காமத்தலத்திற்குரிய நிலம் 58000 ஏக்கர் பரப்புக்கொண்டதாய் அத்தலத்தைச் சூழ்ந்து கிடக்கின்றது. அதன் பரிபாலனம் பௌத்த சமயத்தவராகிய ஒரு பசநாயகநிலமையால் சந்ததி சந்ததியாகப் பார்க்கப்பட்டுவருகின்றது.



## கந்தரலங்காரம்.

வணங்கித் துதிக்க வறியா மனித ருடனிணங்கிக்
குணங்கெட்ட துட்டனை யீடேற்று வாய்கொடி யுங்கழுகும்
பிணங்கத் துணங்கை யலகைகொண் டாடப் பிசிதர்தம்வாய்
நிணங்கக்க விக்ரம வேலாயுதந் தொட்ட நிர்மலனே.

இ—ள்: கொடியும் கழுகும் பிணங்க—காக்கையும் கழுகும் சண்டையிட; அலகை துணங்கை கொண்டாட—பேய்கள் துணங்கைக் கூத்தாட; பிசிதர்தம் வாய் நிணம் கக்க—அசுரர் வாய்க் கொழுப்பை உமிழ; விக்கிரம வேலாயுதம் தொட்ட நிர்மலனே—வெற்றிமுறைமையுடைய வேற்படையைச் செலுத்திய நிர்மல மூர்த்தியே; வணங்கித்துதிக்க அறியா மனிதருடன் இணங்கிக் குணங்கெட்ட துட்டனை ஈடேற்று வாய்—தேவரீரைப் பணிந்து தோத்திரஞ் செய்ய அறியாத மனிதர்களுடன் கூடி (அதனால்) நற்குணங்கள் கெடப்பெற்ற துஷ்டனாகிய தமியேனைக் கடைத்தேறச் செய்தருள்க எ-று

துணங்கை - இரு கைகளையும் முடக்கிப் பழுவில் ஒற்றி ஆடுதலாகிய ஒருவகைக் கூத்து; "முடக்கிய இரு கை பழுப்புடை யொற்றித் துடக்கிய நடையது துணங்கையாகும்" என்பதனாலறிக; பிசிதர் - சூரபன்மன் முதலிய அசுரர்கள். இது தம்மை ஈடேற்றும் வண்ணம் முருகமூர்த்தியை இரந்தவாறும்.

சண்முகப் பெம்பெருமானே, தீயவர் சகவாசத்தாற் பங்கமடைந்த நமியேனை ஆட்கொண்டருள்வீராக என்றபடி.

(அஅ)

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: யுவஹூ
சித்திரைமீ ௧௨ ௨ வியாழக்கிழமை.


## யாழ்ப்பாணப் புகைரதஸ்தானம்.

இலங்கை அரசினர் புகைரதப்பகுதியின் வருவாய் குறைந்துவிட்டதென அரசினர் ஒப்புச்சொல்லியழும் இக்காலத்தில் பண வருவாயில் இரண்டாவதாக வைத்து எண்ணப்படுவது வடபகுதிப் புகைரதமாகும். இப்படியாகவும் வடபகுதிப் பிரதான புகைரதத்தானமாகிய யாழ்ப்பாணத்தானத்தில் புகைரதப்பகுதியார் இராக்காலத்தில், அதிலும் விசேஷமாக, காங்கேயன்றுறையிலிருந்து கொழும்புக்குப் புறப்பட்ட புகைரதமும் கொழும்பிலிருந்து காங்கேயன் றுறைக்குப் புறப்பட்ட புகைரதமும் வந்து நின்று பாதை மாறிச் செல்லும் நேரமாகிய மாலைக்காலத்தில் இத்தானத்தில் இடப்படும் வெளிச்சம் பெரிதும் பரிதாபகரமானது; இங்கு இடப்படும் வெளிச்சம் போதியதன்றென யாழ்ப்பாணவாசிகள் ஒருதரமல்ல, பலதரம் புகைரதப் குதியாருக்கு முறையிட்டுள்ளனர். இங்குள்ள பத்திரிகைகளும் இந்தப் பெருங் குறைவைப் புகைரத மேலதிகாரிகளுக்கு எடுத்துக்காட்டியுள்ளன. யாழ்ப்பாணத் தானமோ காலந்தோறும் சனக்கூட்டத்தில் அதிகப்பட்டுவருகின்றது. புகைரதப்பகுதியாரும் இங்கே புகைரதத்தானத்தைப் பெருப்பித்தல், இத்தானத்தின் மேலாக தூட்கள் ஏறி யிறங்கிச் செல்லுதற்கான பாலமிடுதல் முதலிய பல திருத்தங்களை இப்பொழுது செய்திருக்கிறார்கள். ஆனால் மங்கலான வெளிச்சமிடும் விஷயத்தில் மாத்திரம் புகைரதப் பகுதி மேலதிகாரிகள் மிகவும் பிடிவாதமாக நிற்கிறார்கள்.

சனக்கூட்டமான சமையத்திலே வெளிச்சம் இல்லாமையாலும் மங்கிய வெளிச்சமிருப்பதாலும் வரும் அனர்த்தங்கள் பல. இப்படியான சில அனர்த்தங்கள் யாழ்ப்பாணப்புகைரதத்தானத்திலும் இடையிடையே அவதானிக்கத்தக்கவாகவிருக்கின்றன. அந்தியில் யாழ்ப்பாண ஸ்தானத்தில் பிரயாணிகள் வந்து குழுமுங் காலம் $6\frac{1}{2}$ மணி தொடக்கம் 7 மணி வரையிலாகும். இந்த நேரத்தில் இப் புகைரதத்தானத்திற்குப் பன்னூற்றுக் கணக்கான பிரயாணிகள் யாழ்ப்பாணத்தின் நாற்புறத்துமிருந்து விரைவாய் வந்து சேருகிறார்கள். மேலும் அங்கே பயணமனுப்ப வரும் சுற்றமித்திரர்களை ஒரு பிரயாணிக்குச் சராசரி இரண்டு பேர் விகிதமாக வைத்துக்கணக்கிடலாம். விடுதலைக் காலத் தொடக்கமாகவும் முடிவாகவும் இருப்பின், விசேஷ உற்சவம் நடக்கும் தினமாக இருப்பின், பன்னூற்றுக்கணக்கானோரல்லர் பல்லாயிரக்கணக்கான பிரயாணிகள் இந்தத் தானத்தில் வந்து கூடுகின்றனர். பிரயாணிகள் மோட்டரதம், குதிரை வண்டி, மாட்டுவண்டி, றிக்ஷோ என்னுமிவைகள் வாயிலாக வந்து தானத்தின் வெளிப்புறத்தில் இறங்குவதற்கிடையில், மிக்க ஆவலோடு நிற்கும் புகைரதக் கூலியாட்கள் பிரயாணிகள் கொண்டுவரும் இருப்புப் பெட்டி, பயணப்பை, வேறு போதி ஏனைய பண்டங்களென்னுமிவைகளைப் பருந்து கோழிக்குஞ்சை இருஞ்சிக்கொண்டு செல்வது போல, அப்பொருளுக்கு உரியவர்களுடைய அநுமதியைத்தானும் எதிர்பாராமல், எடுத்துக்கொண்டு வேகமாகச்செல்ல, சொந்தக்காரரில் ஒருவர் வண்டியிலிருந்து இறங்கித் தொடர்ந்துபோக, இதற்கிடையில் வாசலில் நிற்குங் காவலன் இவரைத் தடுத்து, பிரயாணச்சீட்டு, இல்லையேல் மேடைச்சீட்டுக் கேட்க இவர் அவனுக்குப் பதில் சொல்லிவிட்டு உள்ளே போவதற்கிடையில், பெட்டி கொண்டுபோனவன், அந்தப் பெட்டியைத் தானமேடையின் ஓரத்தில் ஒரு புறத்தே வைத்துவிட்டு, வேறு பிரயாணிகளின் பெட்டிகளையும் போதிகளையும் தூக்கிக்கொண்டுவருதற்குப் போய் விடுகிறான். தொடர்ந்துபோனவர் தானத்தில் நல்ல வெளிச்சமில்லாமையினால், தன் பெட்டி வைக்கப்பட்ட தெங்கே, போதி எது என்று ஆராய்ந்துகொண்டு திரிகிறார்.

இவைமட்டோ, இல்லை, இல்லை, நல்ல வெளிச்சம் தானத்தில் இல்லாமையால் எத்தனையோ பெட்டிகளும் போதிகளும் பொருள்பண்டங்களும் சில சமையங்களில் மாறிக்கொண்டுபோய்ப் புகைரதத்தில் ஏற்றப்படுகின்றன. சில சமையங்களில் பெண்கள் பிள்ளைகள் அணிந்திருந்த நகைகளும் பிடுங்கப்படுகின்றன. சில மாதங்கட்கு முன்னர் இங்குள்ள டிஸ்திரிக் நீதிபதியொருவருடைய குழந்தை அணிந்திருந்த சங்கிலி பிடுங்கப்பட்டமையைப் பலர் பத்திரிகை வாயிலாகவும் கேள்வியாலும் அறிந்திருப்பர். இந்த அனர்த்தங்களுக்கெல்லாங் காரணம் யாழ்ப்பாணப் புகைரதத்தானத்திற் பகல் போன்ற வெளிச்சம் ஏற்றப்படாமையாகும். யாழ்ப்பாணப்பட்டினத்திலே மின்சார வெளிச்சம் ஏற்பட்டு இரண்டு வருடங்களாகின்றன. இங்குள்ள தெருவீதிகள் மாத்திரமல்லாமல் இல்லங்கள், கடைகள், வியாபாரத் தலங்கள், கோயில்கள் முதலாம் பல இடங்களில் இவ்வெளிச்சம் எரிகின்றது. ஆனால் அரசினர் மாத்திரம் நமது பட்டினசங்கத்தார் இடும் வெளிச்சத்தைப் பகிஷ்காரஞ் செய்து தங்கள் உத்தியோகத் தானங்கள் புகைரதம் முதலிய இப்படியான இடங்களில் அவ்வெளிச்சத்தை ஏற்றவிக்கச் சம்மதியாது வியாபாரம் பேசுகின்றனர். யாழ்ப்பாணப் புகைரத ஸ்தானம் இப்படிச் சீர்கெட இங்கு வரும் வருவாயிற் பெரும் பாகம் வருவாய் குறைந்த வேறு மாகாணத்திலுள்ள புகைரதத்தானங்களைச் சீர்ப்படுத்தும் விஷயத்தில் உபயோகிக்கப்படுவது பெரிதும் அடாத செயலாகும். புகைரதத் தலைவர் செய்யும் இவ்வக்கிரமத்தை நமது தமிழ்ப் பிரதிநிதிகள் நால்வரும் சமீபத்தில் வரும் அரசாங்கசபைக் கூட்டத்தில் எடுத்துக்காட்டி இக்குறைபாட்டை விரைவிலே திருத்துவதற்கான முயற்சிகளைச் செய்வரென இங்குள்ளார் எதிர்பார்த்திருக்கின்றனர்.

## உலகம் பலவிதம்.

—:*:—

யாழ்ப்பாணப்பகுதிப் புகைரதம் அதிக வருமானத்திற்கு ஏதுவாயிருக்க, யாழ்ப்பாணப் புகைரதஸ்தானத்திற் பிரயாணிகள் சஞ்சாரம் அதிகமாகவிருக்க, புகைரதப்பகுதித் தலைவர் இந்தத் தானத்திற்கு மின்சாரவெளிச்சமிடும் விஷயத்திற் பின்னிற்பது நூதனமாயிருக்கின்றது. குறைந்த செலவு பெற்றுக்கொண்டு நிறைந்த மின்சாரவெளிச்சமிடும்படி புகைரதத் தலைவர் யாழ்ப்பாணப் பட்டினபரிபாலனசங்க அதிகாரிகளைக் கேட்கிறார். பட்டின சங்கத்தார் தாங்கள் இங்குள்ள அரசினர் வைத்தியசாலைகள் போன்ற தருமத்தாபனங்களுக்குத்தானும் குறைந்த செலவில் வெளிச்சம் போடுதலின்றி வழக்கமான செலவையே பெற்றுக்கொள்ளும்போது, நல்ல வரும்படியுள்ள புகைரதத்தானத்திற்கு வெளிச்சமிடுஞ் செலவை ஏன் குறைப்பானென்று நியாயம் பேசுகிறார்கள். அதற்குப் புகைரதத் தலைவர் வேறுபட்டினங்களில் இப்படியான தாபனங்களுக்கு வெளிச்சமிடும் விஷயத்தில் நகரசங்கத்தார் பட்டின சங்கத்தார் சிறிது சகாயஞ் செய்கின்றனரென்று யாழ்ப்பாணப் பட்டினசங்கத்தாருக்குத் தெரிவித்தார். அப்படி அவர் தெரிவித்தபோது இவர்கள் "எந்த இடத்திலே இப்படியான இடங்களுக்குச் சிரயக் குறைந்து வெளிச்சமிடப்படுகின்றது; எடுத்துக்காட்டும்" என்று கேட்டார்கள். "நான் விரைவில் ஆராய்ந்தறிந்து உங்களுக்குத் தெரிவிக்கின்றேன்" என்று விடையிறுத்தார் புகைரதத் தலைவர். விரைவில் விடைவராமையைக்கண்டு பட்டின சங்கத்தார் தங்கள் கேள்விக்கு, தயவுசெய்து விடைசொல்ல வேண்டுமென்று கேட்டார்கள். "நான் அந்த விஷயமாகத்தான் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறேன்" என்று பதில் எழுதினார் அவர். பின்னரும் இவர்கள் அவரைப் பதிலுக்கு நெருக்கிய போது "அப்படிக் குறைந்த செலவிற்கு வெளிச்சமிடுவதாக எனக்கொன்றும் புலப்படவில்லை யென்பதையிட்டுத் துக்கப்படுகிறேன்; ஆனால் நீங்கள் குறைந்த செலவில் வெளிச்சமிட்டாற்சரி, இல்லையேல் உங்கள் வெளிச்சம் புகைரதஸ்தானத்திற்கு வேண்டியதில்லை" என்னுங் கருத்துப்படப் புகைரதப்பகுதித் தலைவர் விடைகூறிவிட்டார்.

*  *  *

அவருடைய கடைசிப்பதிலைக்கொண்டு இப்போதைக்கு யாழ்ப்பாணப் புகைரதத் தானத்தில் மின்சார வெளிச்சம் இடப்படமாட்டாதென்று நமது முருகேசு கிச்சயித்துக்கொண்டு சென்ற ஞாயிற்றுக் கிழமை (21-4-35) மாலை $6\frac{1}{2}$ மணி வரையில் யாழ்ப்பாணப் புகைரதத்தானத்திற்குப் போனார். அங்கே அவர் அந்நேரத்தில், நல்ல வெளிச்சமில்லாமையால் அவதானித்த சிலவற்றைச் சொல்லுகிறார். எங்ஙனமெனின், புகைரதத் தானத்தை அடைந்தமாத்திரத்தே மோட்டாரதத்தினின்றும் இறங்கிப் புருஷன் முன்னே போக அவனைத் தொடர்ந்து சென்ற மனைவி சனக் கூட்டத்திற் புகுந்த புருஷனைக் காணாமல் தடுமாறுகிறாள் காரணம் துலாம்பரமான வெளிச்சம் இல்லாமையாகும். புகைரதம் வரும் சமையத்தை எதிர்பார்த்துக்கொண்டு பெண்களுக்குரிய அறையுட் பல பெண்களோடு கூடியிருக்குந் தன் மனைவியை, புகைரதம் வரும்போது கூப்பிடச் சென்ற கணவன் அந்த அறையுள் எரியும் மங்கல் வெளிச்சத்திற் பெண்களெல்லாம் ஒரேவிதமாகத் தெரியப்படுதலால், தன் மனைவி பிறன் மனைவி யென்ற பேதந் தெரியாமல் நின்று இடர்ப்படுகிறான்; அந்தப் பெண்ணும், வெளியே எரியும் வெளிச்சமும் மங்கலாக விருப்பதால் வந்து தேடுபவர் தன் கணவனோ இன்னொருத்தியின் புருஷனோ என்று அறியாது சங்கடப்படுகிறாள். இவர்கள் பரஸ்பரம் ஒருவரையொருவர் கண்டுகொண்டு, பெட்டியிலேறும்படி புருஷன் முன்னும் மனைவி பின்னுமாகப் போகும்போது, வெளிச்சம் மங்கலானதால் மனைவி புருஷனையும் புருஷன் மனைவியையும் தவறவிட்டுத் திகைக்கின்றார்கள் என்பதாம்.

*  *  *

புகைரதப்பகுதித் தலைவர் இப்பட்டின பரிபாலன சங்கத்தாரிடம் வெளிச்சத்தை ஒத்துக்கொள்ள இஷ்டமில்லாவிடில் தம் பொறுப்பிலாவது துலாம்பரமான வெளிச்சத்தைக் கூடிய சீக்கிரத்தில் இத்தானத்தில் இடுதல் வேண்டும். அவருடைய வங்ளாவிற்கு இல்லையேல் உத்தியோகத் தானத்திற்கு வெளிச்சமிடும் விஷயத்தில் அவர் தமது எண்ணப்படி செய்துகொள்ள முடியும். இலங்கையிலுள்ள புகைரத ஸ்தானங்களுள் இரண்டாவதாக வைத்தெண்ணப்படத்தக்க யாழ்ப்பாணப் புகைரதத்தானத்திற்கு வெளிச்சமிடுவதில் இப்படி மலிவு பார்த்துக்கொண்டு பின்னிற்பது சரியல்ல. யாழ்ப்பாணத்தானத்தைக் காட்டிலும் பிரயாணிகள் சஞ்சாரங் குறைந்த அப்பிரதானமான எத்தனையோ தானங்களில் விசேஷ வெளிச்சங்கள் ஏற்பட்டிருப்பதையும் வேறு பல சௌகரியங்கள் செய்யப்பட்டிருப்பதையும் பிரயாணிகள் நன்கு அறிவர்.

### சங்கானைக் கிராமச்சங்கம்.

மரமேறி கிராமச்சங்க அங்கத்தவனாகத் தெரிவுசெய்யப்படல்.

சில வாரங்கட்கு முன்னர் சங்கானைக் கிராமச்சங்கத் தெரிவு நடந்தபோது, சாதி வித்தியாசங் காரணமாக ஏற்பட்ட பிணக்கில் அங்குள்ள வேளாளர் ஒரு மரமேறியை அங்கத்தவனாகத் தெரிந்தனுப்பியுள்ளனராம்.

### திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசை.

நிகழும் யுவஹூ சித்திரைமீ 15உ ஞாயிற்றுக்கிழமை (28-4-35) ஷை சுவாமிகள் குருபூசை வழக்கம்போல மாணிப்பாய் இந்துக்கல்லூரி திருநாவுக்கரசு நாயனார் மண்டபத்தில் நடைபெறும்.

### புதைக்கப்பட்ட அபின் 102 றூத்தல்.

புதுச்சேரியிலிருந்து பெருந்தொகையான அபினை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணத்தின் வட துறைமுகங்களுக்கு ஒரு படகு புறப்பட்டிருக்கின்றதென்பதை உளவாலறிந்த துறைமுகப்பகுதி உத்தியோகத்தரான ஸ்ரீ N. சதாசிவமென்பவர் இரண்டுமூன்று தினமாகத் துறைமுகங்களில் ஆட்களைக் காவல்வைத்திருந்தார். ஒருநாள் கள்ளிசவில் மாதகற் கடற்கரையிலுள்ள ஒரு கானத்தில் சிலர் ஏதோ கொண்டுவந்து புதைப்பதைக் காவலரில் ஒருவன் கண்டு ஓடிப்போய்க் குறித்த உத்தியோகத்தருக்குச் சொல்ல, அவரும் இன்னொருவரும் அந்த இடத்திற்கு வரவே அங்கு நின்றவர்கள் ஓட்டம் பிடித்தனர். கடற்கரையில் ஒரு இடத்தில் மண் புதிதாகத் தோண்டிப் பின் மூடப்பட்டிருப்பதைக்கண்டு துறைமுகப்பகுதியார் மீளத் தோண்டியபோது ஒரு பெட்டியுள் 102 றூத்தல் வரையில் நிறைகொண்ட அபின் கண்டெடுக்கப்பட்டதாம். அதன் விலை 10000 ரூபா வரையிற் பெறுமெனச் சொல்லப்படுகிறது.

## புதினக்குறிப்புக்கள்

### பஸ் எரிந்தமை.

சென்ற திங்கட்கிழமை (22-4-35) இரவு 10 மணிக்கு மேல், யாழ்ப்பாணம் பெரிய கடைத் தெருவுக்கணித்தாகவுள்ள கறேஜில் (கொட்டிலில்) விடப்பட்டு நின்ற பெரிய பஸ் ஒன்று தீப்பிடித்துச் சாம்பராய் எரிந்து விட்டது. "பாக்கோ" வேலுப்பிள்ளை யென்பவருக்குரிய இந்த பஸ் யாழ்ப்பாணத்திற்கும் திருக்கோணமலைக்குமிடையில் ஓடுவது; அன்றுமாலைக் காலத்தில் திருக்கோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்தையடைந்த இந்த பஸ் பிரயாணிகள் இறங்கிய பின் கறேஜில் விடப்பட்டிருந்தது. இதில் ஏற்றப்பட்ட பொருள் பண்டங்கள் இறக்கப்படவில்லை. இரவு 10 மணிக்குமேல் இந்த பஸ்ஸின் தொட்டியிலிருந்த எண்ணெயை இன்னொரு பஸ்ஸிற்கு மீட்டு விடுவதற்காக எடுக்கும்போது, பக்கத்தில் ஒருவர் பிடித்துக் கொண்டு நின்ற உலாந்தர் விளக்கில் பெற்றோல் எண்ணெய் தெறித்தமையால் பஸ்ஸில் நெருப்புப் பறிவிட்டதாம். அயலிலே நின்ற பஸ்ஸிலும் நெருப்புப் பற்றவே, அது உடனே அவிக்கப்பட்டது. அயலிலுள்ளவர்கள் பெருவெளிச்சத்தைக் கண்டும் ஓலமிட்ட சத்தத்தைக் கேட்டும் ஓடிவந்து கடைகளிலும் பஸ்கொட்டிலிலும் நெருப்புப் பற்றுதபடி தடுக்க முயல்வதற்கிடையிற் பொலிஸ் தலைவர் மிஸ்ரர் டிக்மன், பொலிஸ் பரிசோதகர் மிஸ்ரர் பர்னுக்தோ, சில பொலிசர் முதலியவர்கள் வந்து நெருப்பு எங்கும் பரவாதபடி தடுத்துவிட்டனர். எரிந்த பஸ்ஸின் இருப்புச் சாமான்கள் மாத்திரம் எஞ்சிக்கிடக்கின்றன. இதனால் 2000 ரூபா வரையில் நஷ்டமென்று சொல்லப்படுகின்றது.

### தேகவியோகம்.

வண்ணார்பண்ணை கிழக்கில் வசிக்கும் பிரபல நாகசுரம் சு. வைரவநாதனின் தகப்பனுகிய வை. சுப்பையா என்பவர் தம்மைச் சிலகாலம் பீடித்து வருத்திய நோய் காரணமாக சென்ற ஞாயிற்றுக் கிழமை சாயந்தரம் 4 மணிவரையில் தமதில்லத்திற்றனே இவ்வுலகவாழ்வை நீத்தனர், —கடித.


## விளம்பரம்.

வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைக்குப் பயிற்றப்பட்ட தராதர பத்திரம் பெற்ற ஒரு சைவ உபாத்தியாயி வேண்டும்.

(24-4-35) த. கைலாசபிள்ளை.

(Mis 31. 25-4-35.)

## NOTICE OF SALE.

கோட்டுக் கொம்மிசன் விற்பனவு அறிவித்தல்.

திருக்கோணமலை டிஸ்திரிக்கோட்டில் இலக்கம் 1616.

திருக்கோணமலை 9ம் நம்பர் C. V. விசுவலிங்கம் —வழக்காளி.

நிலாவெளி சுந்தப்பர் கணபதிப்பிள்ளை —பதில்வழக்காளி.

எதிராக.

1. C. வல்லிபுரம்பிள்ளை முதலியார் மரணம்
2. திரு 1ம் நம்பர் வல்லிபுரம்பிள்ளை முதலியார் கைம்பெண் வள்ளிப்பிள்ளைநாயகம்

இதன்பின்னால் விபரிக்கப்படும் ஆதனங்கள் கொம்மிஷனர் கு. வேலாயுதர் நாகலிங்கம் ஆகிய என்னால் குறித்த கோட்டுக்கட்டளைப்படி 1935ம் ஆண்டு வைகாசி மாதம் 4ந் திகதி சனிக்கிழமை காலமே 1 மணி தொடக்கம் குறித்த காணிகளிடமாகவிருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதனங்களின் விபரம்.

கிழமாகாணம் திருக்கோணமலை டிஸ்திரிக் தம்பலகமப்பற்று கிணியாய் கண்டலக்காட்டிலிருக்கும் M. 198ம் இலக்க லொட்டாகிய ஊர்க்குளம் என்று அழைக்கப்படும் ஓர் தண்டுவயல் நிலதநில் பிறிவிடாத சரிவாரைவாசியும் அத்தனைக்கும் எல்லைகளாவன [illegible] இருக்குகளுக்கும் காலஞ்சென்ற க. மு. மயிலவாகன முதலியாரின் உரித்தாளரின் தறை விலாசம் ஏக்கர் 25. றூட் 2. பேர்ச் 10ம் Registered P. R. D. $\frac{6}{283}$.

2. கிழமாகாணம் டிஸ்திரிக் டிவிசன் பகுதி கிணியாய் கண்டலக்காட்டிலிருக்கும் S. 198ம் இலக்கத் தண்டு நிலமாகிய பள்ளத்து வயல் என்று அழைக்கப்படும் ஓர் தண்டு வயல் நிலம் இதன் எல்லைகளாவன மேற்கு 106955ம் இலக்க டயிற்றில் படத்தில் சொல்லிய தறை மற்றுதிக்குகளெல்லாம் காலஞ்சென்ற க. மு. மயில்வாகனமுதலியாரின் உரித்தாளரின் தறைகள் இதன் விலாசம் ஏக்கர் 19. பேர்ச் 9ம் Registered P. R. D. $\frac{11}{288}$.

கு. வே. நாகலிங்கம்,
கொம்மிசனர்.

புலோலிமேற்கு,
பருத்தித்துறை,
1935ம் ஆ பங்குனிமீ 25-ம்.
(Mis 33. 25 4 35.)

# "சும்மா."

"சும்மா என்பது இன்மைக்கும், உபசாரத்திற்கும் செயலிழப்பிற்கும், பொதுவாய் நிற்குமோர்பலபொருள் குறித்த ஒருசொல். சும்மா சொன்னான் என்றவழி அஃது இன்மையைக் குறிக்கும். "வாளுயர் தோற்றம்" என்றவழி, அஃது உபசாரத்தைக் குறிக்கும். சும்மா இருந்தான் என்றவழி அஃது செயலிழப்பினைக் குறிக்கும். ஒருவன் எடுத்துக்கொண்ட மனுட சரீரத்தை விட்டுச் சுவர்க்கம் புகுந்தான், நிரயம் புகுந்தான் என்ற வழி ஒருவனெனக் குறிக்கப்பட்ட வஸ்து உடம்பன்றி ஆன்மாவென்றே தெளிவாகின்றது. ஆன்மாவென்பது நித்தமாய், வியாபகமாய், சேதனமாய், பாசத்தடையுள்ளதாய் இறைவன் திருவருளை வேண்டி நிற்பதோர் வஸ்துவேயாகும். இவ்வான்மாவுக்குள்ள சிறப்புக் குணங்களுள் வியாபகமுமொன்றேயாகும். இச்சிறப்புக்குணம் முப்பொருட் பொதுமையி னீக்குஞ் சிறப்பன்று. தன்னியல்பிற் சிறப்பேயாம். வியாபகம் என்பதன் பொருள் நிறைவாய் நிற்றல். அதுதான் சகல அண்ட புவனங்களிலுங் கலந்து, அபின்னமாய் நிற்றல்; இங்ஙனமாகவே ஒருவன் சுவர்க்கம் புகுந்தான், நரகம் புகுந்தான், என்பன சும்மா சொல்வனவேயாகும். சகல அண்ட புவனங்களிலும் விரவி அபின்னமாய் நிற்பதோர் பொருட்குப் போக்குவரவு சொல்லுதல் உண்மையன்றாகலின். அங்ஙனமாயின் வேதாகமங்களிலெல்லாம் ஆன்மாவுக்குப் போக்குவரவு சொல்லியிருப்ப அதற்கு விரோதமாக இங்ஙனங் கூறுதல் ஆகமப் பிரமாண விரோதமாம் பிறவெனின்? அற்றன்று. அவைகள் மற்றோர் கருத்துப் பற்றிக் கூறியனவாகலின். அக்கருத்துத்தான் யாதோவெனின் கூறுவல். அநாதியாகவே மலத்தான் மறைப்புண்டு தன்னியல்பு விளங்காது தங்கிய ஆன்மாவின்மீது அநாதிமல முத்தராகிய பரமேஸ்வரன் கருணை கூர்ந்து அவ்வான்மாவை அம்மறைப்பினீக்கித் தன்னியல்பு விளக்கிப் பேரின்பங் கொடுத்தாளவான் திருவுளங்கொண்டு அதற்குக் கருவியாகிய சூக்கும, தூல, சரீரங்களையுமுதவி, வேதசிவாகமங்களையும், திருவாய் மலர்ந்தருளினர். இச்சரீரங்களுள் சூக்கும சரீரமாவது, சிருட்டி காலந் தொடங்கிச் சங்கார காலம் வரையும் நிலை பெறுவதோர் அருவுடம்பாகும். இவ்வருவுடம்பே பூத பரிணாமமென்றும், பூதசாரமென்றும், வரும் உருவுடம்புகட்குக் கருவியாயுள்ளது. உருவுடம்பையெடுத்த ஆன்மா இவ்வருவுடம்புடன் கூடி, உருவுடம்பின்கணுள்ள பொறிகளை விரவி அவ்வழியானே அறிதலைப் பொருந்துவதாகும். எந்த உடம்பையெடுத்த ஆன்மாவும் அருவுடம்பாகிய மனத்தோடும் மனம் இந்திரியத்தோடும் கூடிநின்றே விஷயங்களை அறிகின்றனவென்பது எல்லாருக்கும் ஒத்த துணிபேயாகும். அவ்வருவுடம்போடு கூடிநின்றே வினைகளைச் செய்தும் வினைப்பயன்களை அநுபவித்தும் வருவதாக வேதாகமங்கள் கூறும். அங்ஙனம் இருவகைச் சரீரமுங் காரணமாகவே வினைகளைச் செய்தும் வினைப்பயன்களை அநுபவித்தும் வருதலால் அவ்வான்மாவுக்குச் செய்த வினைக்கீடாகச் சரீரம் சுவர்க்க நிரய முதலிய எல்லாவிடத்தும், கொடுக்கப்படுகின்றது. அப்படி எல்லா இடத்தும் சரீரங் கொடுக்கப்படுதல் பற்றியே அதற்குப் போக்குவரவும் கூறப்படுகின்றன. இவ்வுண்மையை ஆராயும் வழி இம்மண்ணுலகத்தில் அசுவமேதயாகம் முதலிய பெரும் புண்ணியங்களைச் செய்தவழி அவனுக்கு அப்புண்ணியப்பயனை அநுபவித்தற் பொருட்டு இவ்விடத்துக்கொடுக்கப்பட்ட பூத பரிணாம சரீரத்தினீக்கிப் பூதசாரசரீரமாகிய தேவவுடம்பு எற்றபிரகாரம் சுவர்க்கம் முதலிய இடங்களில் கொடுக்கப்படுகின்றது. அவ்வழிப் பூத பரிணாம சரீரத்தினின்றும் பூதசாரசரீரத்தைச் சென்று சார்ந்தது அப்பூத பரிணாம சரீரத்தமர்ந்த அருவுடம்பேயாகும். வினைப்பயனும் அதன்வழிச் செல்வதேயாகும். அவ்வருவுடம்பு அணுவளவாயிருத்தலானும் அணுவளவாகிய அதற்கே போக்குவரவன்றி ஆன்மாவிற்குப் போக்குவரவின்றாகவும் அதற்குப் போக்குவரவு கூறுதல் அதன் அறிதன் முதலியவற்றன் கருவியாகிய அவ்வருவுடம்பின் செயலே ஒற்றுமைநயம்பற்றி ஆன்மாவின் மேல் ஏற்றிச் சொல்லப்பட்டதன்றிப் பிறிதன்றென்க. ஆன்மாவிற்கு அணுவென்னும் பெயரும் அவ்வியல்பான் வந்ததேயாமென்க.

> "கண்ட கனவுகனவுணர்விற் கண்மறந்த
> விண்படர்ந்த நாடி வினையிருந்—தண்செவிகெட்
> டின்னதே தோற்ற வுளமணுவாய்ச் சென்றமனந்
> தன்னின் விழுங்குதலிற் றான்."

என்னும் சிவஞானபோத வெண்பாவும் யாம் ஈண்டுக் கூறிய கருத்துப்பற்றியே எழுந்ததென்க. அங்ஙனமாயினும் இதனைப் பிறிதோராற்றான் விளக்குவல். குடம்போல உள்ளது சூக்கும சரீரம். குடாகாயம்போல உள்ளது ஆன்மா. ஒருவன் குடத்தைக் கொடுசென்ற வழியெல்லாம் குடாகாயமும் உடன் செல்கின்றது. அக்குடத்துள் வியாபித்த ஆகாயம் அக்குடம் சென்றவிடத்து உண்டோ இன்றோ என்று ஆராயுமிடத்து உளதாகவே காணப்படுகின்றது; காணப்படும் வழி அதற்கும் இக்குடாகாயத்திற்கும் யாதாயினும் பின்னமுண்டோவென்று பார்த்தால் யாதொரு பின்னமும் காணப்படுதலரிது. ஆகவே ஆண்டை ஆகாயமும் ஒன்றேயன்றி வேறன்று. மற்றிதற்குக் குடாகாயமென்பதுதான் குடநிமித்தமாக வந்ததன்றிப் பிறிதன்று. குடமுடைந்தவழிக் குடாகாயமென்பதொன்று இன்மையின், குடாகாயமும் மகாகாயமும் ஒன்றேயென்பது தெள்ளிதிற் றுணியப்படும். எங்கும் வியாபியாகிய ஆன்மா தன் அறிவு செயற்கருவியாகிய சூக்கும சரீரத்தினும் வியாபித்து நிற்கின்றதென்பதில் ஐயமேயில்லை. ஆகவே அச்சூக்குமசரீரஞ் செல்வழியெல்லாம் அதன்கண் வியாபித்த ஆன்மவியாபகமும் உடனிகழுமாகலின் அதுபற்றியே ஆன்மாவுக்குப்போக்குவரவு வேதாகமங்கள் கூறுகின்றனவென்பதும் அமைவுடைத்தென்க. அங்ஙனமாயின்குடமுடைந்தவழிக் குடாகாயம் மகாகாயமாமாறுபோலச் சூக்கும சரீரம் கெட்டவழி அதன்கண் வியாபித்துடனிருந்த ஆன்மாவும் தன்னியல்பாகிய சர்வஞ்ஞதை முதலிய உண்மை நிலையைப் பொருந்துமோவெனின் அதுவே ஆகமநூற்றுணிபென்க. "குடாகாய வாகாயக் கூத்தாட்டாமென்ப, கடாதுள்ளம் போமாறது" என்பதனாலும் அதனுரையானும் அதனை இனிது விளங்கலாம். இது காறுங் கூறியவாற்றான் ஆன்மாவிற்குப் போக்குவரவு கூறுதல் சும்மா என்பது சாதிக்கப்பட்டது. இனிச் சும்மாவென்பது பெரும்பாலும் உபசாரத்தையே குறிக்கும் வகையையும், விளக்கிக் காட்டுவல். யான் ஓர் அரசனுக்கு அல்லது ஓர் பிரபுவிற்கு ஓர் பாமாலையைப் பாடிக்கொண்டு சென்றேன். அங்ஙனஞ் சென்று அவன் முன்னிலையில் அதனைப் படித்தவழி அவன் அதற்குப் பரிசாக நூறாயிரம் பொன்னைத் தந்தான் என்று வைத்துக்கொள்வோம். அப்பொருள் அவன்மாட்டுக் கூடியவழித் திருவருள் கூட்டக்கூடியதோ அன்றி அவனாற்றலாற் கூடியதோஎன்று விசாரிப்போமாயின் அவனாற்றலாற் கூடியதென்பதற்கு யாதேனும் பிரமாணங் காட்டலாகாது. ஒற்றுமை நயங்கருதி அவன் என்று குறிக்கப்பட்ட சரீரத்திற்கும் ஆன்மாவிற்கும் வேற்றுமை நயங்கருதி ஆராயுமிடத்துச் சித்தாகிய ஆன்மாவிற்கும் சடமாகிய சரீரத்திற்கும் உள்ள சம்பந்தமும் ஆற்றலும் திருவருளான் அடைந்ததேயன்றி அவ்வப்பொருளான் அடைந்ததன்றென்பது நிச்சயிக்கப்படுதலின் அவன்பாற்பொருந்திய அப்பொருளும் திருவருளாற் பொருந்தியதேயென்பது தெளிவாகும். அப்படி உடம்பையும் பொருளையும் கூட்டிய திருவருளே உயிர்க்குயிராய் நின்று இதனை இவ்வாறு செய்குதி யென்று செலுத்திய வழியன்றி, தானே தன்னியல்பான் அப்பொருளை அவன் உளித்ததன்றாகலின் அவனெனக்குப் பரிசு தந்தானென்பது உபசாரமேயன்றி உண்மையன்று. யான் அவனுக்குப் பாமாலை பாடியதும் அவனருளாலன்றி என்னியல்பான் நிகழ்ந்ததன்றாகலின் யான் பாடினேனென்பதும் உபசாரமே.

> "ஆட்டுவித்தா லாரொருவர் ஆடாதாரே
> அடக்குவித்தா லாரொருவ ரடங்காதாரே
> ஓட்டுவித்தா லாரொருவ ரோடாதாரே
> உருகுவித்தா லாரொருவ ருருகாதாரே
> பாட்டுவித்தா லாரொருவர் பாடாதாரே
> பணிவித்தா லாரொருவர் பணியாதாரே
> காட்டுவித்தா லாரொருவர் காணாதாரே
> காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே"

என்பதனாலும் இக்கருத்தை நன்கு தெளியலாம். சிவபெருமான் கைலையிலே தேவியைப்பிரிந்து சனகாதி புனிதர்கட்கு ஞானோபதேசஞ் செய்து மோனமுத்திரையைக் காட்டி யோகியாயிருந்த வழித் தேவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி அவர்களிடுக்கண் தீர்ப்பான் கருதிய விஷ்ணுவானவர் பிரமதேவரைப் பார்த்து மன்மதனை வருவித்து அனுப்பி அவனால் சிவபெருமானுடைய யோகநிலையைத் தவிர்வித்து உமையை மணஞ்செய்யுமாறு செய்விக்குதியென்று ஆஞ்ஞாபிக்க அவ்வாஞ்ஞையை மேற்கொண்ட பிரமா அவ்வாறே மன்மதனை அழைத்து அவ் யோகநிலையைத் தவிர்க்குமாறு செல்லுதியென்று ஏவியவழி அவனும் அதனாற் றனக்கு வருங் கேட்டைக் குறித்தும் ஈசுவரன் யோகநிலையைத் தவிர்க்கத் தன்னாலியலாதென்றும் கூறி மறுத்தவழிப் பிரமா கூறியதாவது:—

> "எல்லார் செயலு மிறைவ னியற்றுவதே
> யல்லா திலையோர் அணுவுமசையா தெவையு
> நில்லா தருளின்றேல் நீயின் றவன்பாலிற்
> செல்லா யுனது செயலுமவன் செய்கையதே"

என்பதும் பிறவுமாம்.

அங்ஙனம் பிரமா கூறிய எதுவை ஆராயுமிடத்து முற்றுஞ் சரியாகவே இருக்கின்றது அன்றியும் .

> "செம்மாந்து நற்புகழ்க் தேவர்குழு வும்மருளு
> வெம்மான் பிறன்போ லிருந்தோர் இரும்புகிரீ
> யம்மா தன்செய்கை யனைத்தமெனக் காட்டினனால்
> நம்மாறு மாகும் சிலவென்கை நாணன்றே"

என்பதும் பிரமாவினது கூற்றை வற்புறுத்துகின்றது. "ஈசனே காப்பனல்லால் யாரையும் பிறராற் றம்மால், ஆசறப்போற்றலாகா தது தெளிவாகும்" என மலையரசன் புதல்வியாகிய உமை மலையரசனுக்குக் கூறிய இக்கூற்றும் மேலதனையே வற்புறுத்துதல் காண்க. ஆகவே அவன் எனக்குத் தீங்கு செய்தான், யான் அவனுக்கு நன்மை செய்தேன் என்றன் முதலிய கூற்றுக்களெல்லாம் ஞானக்கண்ணில்லாத ஊனக்கண்ணுடையார் கூறுஞ் சும்மா கூற்றுக்களேயாம். இதுகாறுங் கூறியவாற்றால் ஆன்மாக்களுடைய செயலாகக் கூறப்படுவனவெல்லாம் உண்மையானன்றி உபசாரமாகவே கூறப்படுகின்றனவென்பது தெளிவாதல் காண்க. அவ்வாறே எத்துணைப் பாவத்தைப் புரியினும் சிவராத்திரி விரதத்தை ஒருவன் அனுட்டிப்பின் அவன் தப்பாது முத்தியையடைவானென்று கூறும் ஆகம வாக்கும் உபசாரமேயாகும். "சரியை கிரியாயோகஞ் செலுத்திய பின் ஞானத்தாற் சிவனடியைச் சார்வர்" என்றும், "ஞானத்தால் வீடென்றே" என்றும், எழுந்த ஆகமவாக்குக்களாலும் அவ்வியல்பு உய்த்துணரப்படுமென்க. இனிச் சும்மா என்பதன் செயலிழப்புப் பொருட்சிறப்பையும் ஒருவாறு காட்டுவல். (தொடரும்)

—"சிவதொண்டன்."

## சோதிஸ்காமகிரியி னறிக்கை.

சமயாபிமான சீலர்களே!

தக்ஷிணகைலாயம் என வழங்கும் ஸ்ரீ கதிர்காம க்ஷேத்திரத்தைத் தரிசிக்கும் பக்தர்குழாங்கள் மலைப் பிரதக்ஷணம் புரிவது மிகவும் அபூர்வமான காரியமாயிருந்தமையால் ஸ்ரீ ஸ்கந்தமூர்த்தியினருளால் சென்ற 1927-ம் ஆண்டில் மறைந்திருந்த பாதையைத் திருத்தலானேன். அக்காட்டொடக்கம் யாத்திரிகர்களின் தாகசாந்தியின் பொருட்டு அச்சிகரத்தே ஓர் தண்ணீர்ப்பந்தரையுமமைத்து அஃது பல புண்ணிய சீலர்களினது ஊக்கத்தால் வருடாவருடம் செவ்வனே நடைபெற்று வந்தது. சென்ற வருடம் (1934) ஆடி மகோற்சவ 15 தினங்களிலும் மாணிக்க கங்கையிலிருந்து ஒரு குடம் தண்ணீர் 40 சதவீதம் எடுப்பித்து இவ்வறனை வழுவாது கடைப்பிடித்தேன். இவ்வருடமும் இத்தரும கைங்கரியத்தை இடையூறின்றி நடாத்தப் போதிய பணமின்மையால், சைவாபிமானிகளனைவருமீடுபட்டு இத் திருத்தொண்டைப் பூர்த்தி செய்து வைக்குமாறு தங்கள் அடிபணிந்து வேண்டிக்கொள்ளுகின்றேன். சைவசமயதனவந்தர்களிருப்பார்களேயானால் யாத்திரிகர்களது தாகத்தைச் சாந்தி செய்யும் பொருட்டு இத்தண்ணீர்ப் பந்தரை யேற்றுத் தாங்களே நடாத்துவார்களாக! அனேக சைவாபிமானிகள் இத் திருத்தொண்டிலீடுபடப் பின்வாங்குகின்றார்கள். அந்தோ இவர்களது பக்தியின் மாண்புதானென்னே?

ஸ்ரீ ஷண்முகப்பெருமானைப் பிரார்த்தித்து ஏதேனும் பணம் வைத்திருப்பவர்கள் அல்லது யாத்திரீகர்பணியிலும் தொண்டர்பணியிலும் பற்றுடையோர் தங்கள் தங்களாலியன்ற பண உதவி புரிந்து இறைவனருளைப் பெற்றுய்வார்களாக!!

பணத்தைக் கீழ்க்காணும் விலாசத்துக்கு மணி ஓடர் அல்லது போஸ்ரர் ஓடர் மூலமனுப்பவும்.

21—4—35
(Q. 20. 25 4 to 24-7-35.)

ஸ்ரீ கதிரமலை அடியான்
ரமண—சங்குசாது
கதிர்காமம், திசைமகருமம்.


# லிட்டில்ஸ் ஓரியெண்டல் பாம்

எல்லா வலிப்புகளுக்கும் நோவுகளுக்கும்

பாரதநாட்டின் முதன்மையானதும்

சிறந்ததுமான திவ்விய ஔடதம்,

மிருகக்கொழுப்பு கலக்கப்படவில்லை என்பதற்கு

உத்தரவாதம்.

(Y 6. 1-4-34—31-12-35)


## கோட்டு விற்பனவு விளம்பரம்.

இல. **6664.**

வீரவாகு வயிரமுத்து எழாலை —வழக்காளி.

எதிர்.

சுப்பிரமணியர் அருணசலம் கைம்பெண் சிவக்கொழுந்து உரும்பிராய் —எதிராளி.

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் 6664ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகள் 1935ம் வருஷம் வைகாசி மாதம் 20-ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்:

### முதலாம்காணி விபரம்.

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கைச்சேர்ந்த உரும்பிராயில் இருக்கும் காணி "குளத்திற்பக்கத்தை" நிலப்பரப்பு $7\frac{1}{2}$ யும் செய்பயிர்களும். எல்லைகள் கிழக்கும், வடக்கும் சுப்பிரமணியா தாமோதரம்பிள்ளையினதும் அவரின் பங்காளர்களுடையவும் உரிமைக்காறரின் ஆதனம். மேற்கு ஒழுங்கை. தெற்கு சின்னத்தம்பி வைத்திலிங்கத்தினதும் அவரின் பங்காளர்களுடையதும், வைத்திலிங்கம் பெண் சின்னப்பிள்ளையினுடையவும் ஆதனம் இதிற் சொல்லப்பட்ட எல்லைகளுக்குள் அடங்கிய ஆதனம் முழுவதும் அதில் உள்ளவைகளும் அடங்கியவைகளும் அதைச் சேர்ந்தவைகளும்.

### இரண்டாம் காணி விபரம்.

(2) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கைச்சேர்ந்த உரும்பிராயில் இருக்கும் காணி "விக்கிருந்தன்" நிலப்பரப்பு இலாச்சம் 104, $\frac{7}{8}$ இதில் சொரியலாக நிலப்பரப்பு இலாச்சம், 5ம் 5, $\frac{10}{64}$ குளியும் $(\frac{3033}{40272})$ பங்குகள் மூனுக்காணியிலும், கிணற்றுப்பங்கும், நடுக்காணியில் நிற்கும் 28 மாமரங்களில் வடக்குப்பக்கமாக 8 மாமரங்களும் கிழக்குப்பக்கமாக இருக்கும் வீடும் [illegible] பிறகிலாகவும், மற்றும் இதில் உள்ள வான்பயிர் செய்பயிர்களும் பனைகளும் எல்லை கிழக்கு ஒழுங்கையும் கந்தர் ஐயம்பிள்ளையின் ஆதனமும், வடக்கு கந்தர் ஐயம்பிள்ளையின் ஆதனம், மேற்கும், தெற்கும் ஒழுங்கை, இதில் சொல்லப்பட்ட எல்லைகளுக்குள் அடங்கிய காணியில் சொரியலாய் நிலப்பரப்பு 5ம் குளி 5 $\frac{10}{64}$ம் அதற்குள் அடங்கியவைகளும் அதைச் சேர்ந்தவைகளும்.

### மூன்றும் காணி விபரம்.

(3) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கைச்சேர்ந்த உரும்பிராயில் இருக்கும் காணி "பிழித்தவாடை" நிலப்பரப்பு இலாச்சம் $6\frac{1}{2}$. இதில் சொரியலாக $\frac{1}{2}$ பங்கும் இந்தக் காணியில் இருக்கும் வீட்டிலும் கூடத்திலும் $\frac{1}{2}$ பங்கும் போட்டிக்கோவிலும் சமையல் அறையிலும் மற்றும் கொட்டில்களும் முழு உருத்தும், செய்பயிர்களும் கிணறும். எல்லைகள் கிழக்கு மாப்பாணர் பொன்னையாவின் ஆதனமும் இளையதம்பி கைம்பெண் நாகமுத்துவின் ஆதனம், வடக்கு இளையதம்பி கைம்பெண் நாகமுத்துவின் ஆதனமும் பங்காளர்களின் ஆதனமும், வேலுப்பிள்ளையின் பெண் வள்ளியம்மையின் ஆதனமும், மேற்கு ஒழுங்கை. தெற்கு மாப்பாணர் பொன்னையாவினதும் பங்காளர்களினதும் ஆதனம். இதில் சொல்லப்பட்ட எல்லைகளுக்குள் அடங்கிய காணியிலும் மற்றும் அதில் உள்ளவைகளிலும் சொரியலாய் மேற்சொல்லப்பட்ட பங்குகளும் அதில் அடங்கியவைகளும் சேர்ந்தவைகளும்.

1935ஞு சித்திரைமீ 20௳

R. Vaitheasparan Iyor
(Mis 22, 25 4 & 2-5-35) கொம்மிஷனர்.

## காட்டுக்காய்ச்சலைப்பற்றிப் பொதுவிகார அறிக்கை.

——):×:(——

(வைத்திய சுகாதாரப் பகுதியாரால் வெளியிடப்பட்டது.)

—:o:—

காட்டுக்காய்ச்சலுக்குக்காரணம்:— இரத்தத்தைக்குடித்துவிஷத்தையும் உண்டாக்கிவிடுகின்ற மிகச்சிறிய நுளம்புப் பூச்சியாற் காட்டுக்காய்ச்சல் வருவிக்கப் படுகின்றது.

காட்டுக்காய்ச்சற் கிருமிகள் மனித இரத்தத்திலும், சில நுளம்புகளின் இரைக்குடலிலும் வாசஞ்செய்கின்றன. அவைகள் வேறு இடங்களில் வசிக்கமாட்டா. காட்டுக்காய்ச்சல் பிடித்த ஒருவரை முன் கடித்து இரத்தங்குடித்த நுளம்பு பின் ஒருவரைக் கடிக்குமானால் அவருக்குக் காட்டுக்காய்ச்சல் தொற்றும்.

காட்டுககாய்ச்சல் பிடித்து வருந்துமொருவரை ஒரு அனோவிலியா நுளம்பு கடிக்கும்பொழுது அது பெருந்தொகையான காய்ச்சற் கிருமிகள் நிறைந்த இரத்தத்தைக் குடித்துத் தன் இரைக்குடலில் சேர்த்துக் கொள்ளுகின்றது அவைகள் அந் நுளம்பின் குடலில் வாசஞ்செய்து கொண்டு இரண்டுகிழமை காலத்தில் வளர்ந்து பருவமடைந்து விடும். இந்த நுளம்பு பின் ஒருவரைக் கடிக்குமானால் அதில வாசஞ்செய்துகொண்டிருந்த கிருமிப் பூச்சிகள் கடிக்கப்பட்டவரின் இரத்தத்தில் புகுத்தப் பட்டுவிடுகின்றது எனவேஇரத்தத்திலிருந்த நுளம்புப்பூச்சிகள் மிக விரைவிற் பெருகி விடுகின்றது. பத்துநாட்களுக்குப் பிற்பாடு அவைகளின் பெருக்கம் அளவுகடந்து விடுகின்றபடியால் காய்ச்சல் தொற்றிப் பரம்ப ஆரம்பமாகிவிடுகின்றது.

காட்டுக்காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகள் எங்கே சேனித்துப்பெருகுகின்றன! சில நுளம்புகள் நிலையாய் நிற்கும் அல்லது ஓடிப்பாயுந் தெளிவான தண்ணீரில் சேனித்துப் பெருகுகின்றன. உதாரணமாக, ஆறுகள், நீரோட்டங்கள், வெட்டாறுகள், கிணறுகள், ஏரிகள், குளங்கள், கல்லுக்கிண்டியெடுத்த கிடங்குகள், முதலியவற்றில் சேனித்துப் பெருகும். வேறு சில நுளம்புகள் செடிப்பத்தை மூடித்து நிறைந்து கிடக்கும் இடத்திலும் நிலையாய் நிற்கும் தண்ணீரிலும் சேனித்துப் பெருகும். சிறிய நிலையற்ற நீர்ச்சுனைகள், மடுக்கள், துரவுகள், தண்ணீர்பாய்ந்து வற்றினபின் கொஞ்சத் தண்ணீரோடிருக்கும் குளிகள் கிடங்குகள் முதலியவற்றில்தான் அவைகளுக்கு அதிகம் பிரியமுண்டு.

காட்டுக்காய்ச்சலின் இயல்பும் விதங்களும்:— காட்டுக்காய்ச்சலில் மிகவும் சுலபமாய்க் கவனித்தறியக் கூடிய குணக்குறிகள்: குளிர், நடுக்கம், பின் கடுங்காய்ச்சல், அதன்பின் சலம் சலமான வெயர்வை முதலியனதான் இக் குணக்குறிகள் ஒன்றுந் தென்படாமலும் பெரும்பாலும் சனங்கள் காட்டுக் காய்ச்சலுண்டு பட்டு வருந்துவார்கள்.

மறுதலிப்பு:— "குயினையின் மருந்தைக்" கிரமமாய்க் குடிக்காமல் விட்டாலும் அல்லது இடையிடையே போகப்போக்காய் அம்மருந்தைக் குடித்துவந்தாலும் காய்ச்சல் முன் முகனையில் மிகக்கடுமையாயும் பின்பு அடிக்கடி மறுதலித்துக்கொண்டு வருவதுமாயிருக்கும். ஆனால் அது படிப்படியாய்க் குறைந்து நெடும் முறைக் காய்ச்சலாயும் வந்துவிடும்.

சுற்றில் நோயாளி காய்ச்சல் விட்டுச் சுகப்பட்டவராயும் காணப்படுவார். எப்படியென்றாலும் நோய் பூரணமாய் மாறுகிறதில்லை. ஏனெனில்காட்டுக்காய்ச்சற்கிருமிகள் அத்தகையோரின் உடம்பில் இன்னும் உயிரோடுவாழ்ந்து கொண்டிருக்கின்றது. அவைகள் அவரின் எதிர்த்தாக்கம் எப்போ குறையுமென்று தருணம் பார்த்திருந்து வசதி ஏற்பட்டவுடன் காய்ச்சலை மறுபடியும் மும்மரமாயுண்டாக்கி விடும். பலமாதங்களுக்கு ஒருவர் செளக்கியவானாயிருந்தபின் இப்படியாய் உண்டுபடுங்காய்ச்சல்தான் "மறுதலிப்பு" என்று சொல்லப்படுகிறது. இம் மறுதலிப்புக் காய்ச்சல்கள் பெரும்பாலும் கவலையினமாய் உலாவித்திரிதல், குளிர், ஆயாசம் முதலிய காரணங்களால் ஏற்படுகின்றது. இத்தன்மைகள் பெரும்பாலும் மழைக்காலங்களின் தொடக்கத்திற்றான் ஏற்படுகின்றது

காட்டுக்காய்ச்சலுக்குச்சிகிச்சை:— காட்டுக்காய்ச்சலுக்கு குயினையின் தான மாற்று மருந்து. நேரகாலத்தோடு ஒரு வைத்தியரைக்கொண்டு காட்டுக்காய்ச்சல்தானோவென்று ரோகநிர்ணயஞ் செய்வித்து குயினையின் மருந்தை ஒழுங்காய்க் குடித்துக்கொண்டுவருதல் புத்தியான காரியம்

(தொடர்ச்சி 5ம் பக்கத்தில்)

## கோட்டு விற்பனவு விளம்பரம்.

இல. 6653

வைத்திலிங்கம் வைரவெண் செப்வானைப்பிள்ளை —வழக்காளி.

நெறப்பிட்டி:
1. தம்பு. சமலிவாயம்
2. செட்டினம்

கீர்வேலி.

எதிர்.

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் 6653 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் நாலு துண்டுக் காணிகள் 1935 ம் ஆண்டு வைகாசி மாதம் 13 ம் தேதி திங்கட்கிழமைபிற்பகல் 4 மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்:

### காணிகளின் விபரம்.

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் தென்மராட்சிப்பகுதியைச் சேர்ந்த நாவற்குழியில் இருக்குங்காணி "வடலிப் பெத்தன் வயலும், குமாரு வயலும்" நிலப்பரப்பு இலாச்சம் 18½ வான்பயிர் செய்பயிர்களும் பனைகளும் எல்லைகள்: கிழக்கு:— வேலாயுதர் ஆறுமுகத்தின் ஆதனம் வடக்கு முருகேசம்பியின் மகள் மாணிக்கத்தின் ஆதனமும் மறுபேர்களின் ஆதனமும் மேற்கு சார்ஜன்சேக முதலியின் மயினர் பிள்ளைகளின் ஆதனம், தெற்கு நாகமுடையார் கறுப்பையாவின் ஆதனம்; இந்தச் சொல்லப்பட்ட எல்லைக்குள் அடங்கிய ஆதனமும், அதைச் சேர்ந்தவைகளும் அடங்கியவைகளும், வடகிழக்குப் பக்கமாக வழி உருத்தும்,

2. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் தென்மராட்சிப் பகுதியைச்சேர்ந்த நாவற்குழியில் இருக்குங்காணி "தம்பையன்வயல்" நெற்பரப்பு இலாச்சம் 10. எல்லைகள் கிழக்கு இராமலிங்கம்பெண் தில்லைப்பிள்ளைக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனமும் வடக்கும் தெற்கும் செல்லப்பாவின் பெண் இராசம்மாவின் உரிமைக்காறரின் ஆதனம் மேற்கு வேலாயுதர் சிவகாமனின் ஆதனம் இந்தச் சொல்லப்பட்ட எல்லைக்குள் அடங்கிய காணி முழுவதும் அதைச் சேர்ந்தவைகளும் அடங்கியவைகளும்,

3. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த நாவற்குழி—கைதடியில இருக்குங்காணி 'கலையப்பூறணிக் கொட்டை வயலும் வயலும் கலய பறணன் கெட்டை வடக்கும்" நெற்பரப்பு இலாச்சம் $82\frac{1}{4}$ வீதம் வான்பயிர் செய்பயிர்களும் வடலிகளும் இவைமுழுவதிலும் சொரியலாய் $\frac{1}{6}$ பங்கு. எல்லைகள் கிழக்கு ஒழுங்கையும் சுந்தர் குளக்கைவேலுவின உரிமைக்காறரினதும் மறுபேர்களினதும் ஆதனம். வடக்கு சிதம்பரம் அம்பலவாணசுவாமி கோவில் ஆதனமும் சின்னத்தம்பி கந்தருடையவும் மறுபேர்களினதும் ஆதனம். மேற்கு தம்பிப்பிள்ளை சிவபிரகாசம் பிள்ளையின் உரிமைக்காறரினதும மறுபேர்களின் ஆதனமும், தெற்கு சந்திரசேகரர் பெண் தையலநாயகத்தின் ஆதனம். இந்தச் சொல்லப்பட்ட எல்லைகளுக்குள் அடங்கிய காணி முழுவதும் அதைச் சேர்ந்தவைகளும் அடங்கியவைகளும்,

4. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த கைதடி—நாவற்குழியில இருக்கும் காணி "கலையப்பூறணைசெட்டை" வயல் நெல்பரப்பு இலாச்சம் 30. எல்லைகள்கிழக்கு செல்லையாவின்பெண் அம்பிகைப்பிள்ளையின் ஆதனமும் மற்றவர்களின் ஆதனமும். வடக்கு வேலம்பிராய்க் கண்ணகை அம்மன்கோவில்; மேற்கு சுப்பிரமணியர் விஸ்வலிங்கத்தினதும மறுபேர்களினதும ஆதனம், தெற்கு விஸ்வலிங்கத்தின் பெண் தங்கத்தின் உரிமைக்காறரினதும சிற்றம்பலத்தின் பெண் அம்பிகைப்பிள்ளையினது உரிமைக்காறரின் ஆதனம். இந்தச் சொல்லப்பட்ட எல்லைக்குள் அடங்கியகாணி முழுவதும் அடங்கியவைகளும் அதைச் சேர்ந்தவைகளும்.

1935 ஞு சித்திரை மீ 15உ.

R. Vaitheasparan Iyer.
கொம்மிஷனர்

Mis 21. 25-4-35 & 2-5-35

## கோட்டு விற்பனவு விளம்பரம்.

இல. 7162

சரவணமுத்து கந்தையா வழக்காளி கோண்டாவில்

எதிர்

வேலுப்பிள்ளை நகம் பெண் செல்லமுத்து கோண்டாவில் —எதிராளி.

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் 7162-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகளை 1935 ஞு வைகாசி மீ 22உ புதன் கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்:

### முதலாம் காணி விபரம்.

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோண்டாவிலில் இருக்கும் காணி "வடுவ ஒடை" நிலப்பரப்பு இலாச்சம் 5 கிணறும் தென்னமரங்களும் எல்லைகள் கிழக்கு எதிராளியின் ஆதனம் வடக்கு சுப்பர் தம்பிப்பிள்ளையினதும் மறுபேர்களினதும் ஆதனமும் மேற்கு கப்பையாவின் பெண் சினப்பிள்ளையின் ஆதனமும் தெற்கு குமரேசம் பெண் ஆவை முதலியின் ஆதனம், இதில் மற்றவர்களின் கிணற்றுப பங்கும், வளிவாய்க்கால் வழிப்பங்குகள் பிறத்தியாக, இந்த எல்லைகளுக்குள் அடங்கிய ஆதனம் முழுவதும் அதைச் சேர்ந்தவைகளும் அடங்கியவைகளும்.

### இரண்டாம் காணி விபரம்.

(2) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோண்டாவிலில் இருக்கும் காணி "காத்தாலை" நிலப்பரப்பு இலாச்சம் 4 ம் வடலிகளும், எல்லைகள் கிழக்கு கந்தையா சரவணமுத்துவின் ஆதனம் வடக்கு முத்தையாவின பெண் ஆச்சிமுத்துவின் ஆதனம். மேற்கு ஐயர் சதாசிவக்குருக்களின் ஆதனம். தெற்கு வைத்திலிங்கத்தின் பெண் அன்னம்மாவின் ஆதனம். இதற்குள் அடங்கிய காணி முழுவதும் அதில் அடங்கியவைகளும் சேர்ந்தவைகளும்.

1935 ஞு சித்திரைமீ 17 உ.

R. Vaitheasparan Iyer.
கொம்மிஷனர்.

(Mis 23. 25-4-35 & 2-5-35)


# இலங்கா ஆயுள்வேத வைத்தியசாலை.

## அவுஷத விபரம்.

### கிரந்தி எண்ணெய்.

இவ் எண்ணெய் குழந்தைகளுக்குக் காணும் கிரந்திக்காய்ச்சல், கொதிக்காய்ச்சல், செங்கிரந்தி கருங்கிரந்தி, செவ்வாப்பு, செங்கரப்பன், அரிகிரந்தி, அக்கி, அகரதுணி இவைகட்கு உள்ளுக்கும் கொடுத்துத் தலைக்கும் வைக்கக்கூடியது. இன்னும் வயதில் முதிர்ந்தவர்க்கு உண்டாகும் நோய்கட்கும் உபயோகப்படக்கூடியது.
3 அவுன்ஸ் சீசா ரூபா 1 00. 6 அவுன்ஸ் சீசா ரூபா 1 90. 12 அவுன்ஸ் சீசா ரூபா 3 75.

### மாந்தபேதி எண்ணெய்.

இவ் எண்ணெய் மந்தம், மாந்தம், மலபந்தம், வயிற்றுப்பிசம் வாயு, சிதக்கட்டு, வயிற்றுவலி, கிருமி ரோகங்கள், மாந்தசுரம், வயிறூதல் அடிக்கடி மலமிறங்குதல் ஆகிய இவைகளை மாற்றக்கூடியது.
சிசுக்களுக்கு ¼ முதல் ½ தேக்கரண்டி, பாலர்களுக்கு ½ முதல் 2 தேக்கரண்டி, வாலிபர் - வயோதிபர் 2 முதல் 4 தேக்கரண்டி, வெந்நீர், தேநீர், பால்கலந்து குடிக்கவும். சீசா விலை சதம் 75.

### கந்தகமூலி ரசாயனம்.

ஆண், பெண், இருபாலார்க்கும் உபயோகமாகும்படி செய்த இந்த ரசாயனம்.

சோகை, பாண்டு, வீக்கம், காமாலை, மிரேக பாரிப்பு, நீர்க்கோவை, பிறநீர்க்கோவை, பெருவயிறு, நீராமை, பேராமை, கவுசி, கெண்டை முதலிய உதரரோகங்களையும்; சொறி, கரப்பன், கிரந்தி படர்தாமரை, அரிப்பு, தடிப்பு, சட்டிகள், கிரந்திநீர் சம்பந்தமான மற்றும் ரோகங்களையும்; மலபந்தம், சிறுநீர்க் குறைவு, கால் கை உளைவு கடுப்பு அசதி, கனதி, முதலாம் ரோகங்களையுந் தீர்க்கும்.

இன்னும் கெற்பாசய கிரந்தி, சூதகவாய்வு, சூதககாலவயிற்றுவலி, சூதகம், சூதகச்சிக்கல், சூதகக்கட்டி காலந் தவறிச் சூதகஞ் சாறுதல், சூதகம் வராது தடைபடல், சூதகச் சிக்கலினால் தேகம் பாரித்தல், மலட்டுரோகம், அடிக்கடி கெற்பமழிதல், கெற்பத்தில் சிசுவை மரிக்கச் செய்தல, கெற்பமுண்டாகாமை, கெற்பாசயக்கிருமி, கெற்பாசயத்திற் சதை வளர்தல், சவ்வுவளர்தல், பாசபற்றியிருத்தல், மதர்த்திருத்தலாகிய கெற்பாசய ரோகங்கள் யாவையும் நீக்கிக் கெற்பமுண்டாகச் செய்யும்.

12 அவுன்ஸ் விலை ரூபா 2—25,

### மிளகு சந்தனாதித் தைலம்.

தைலங்களுள் அதி குளிர்ச்சி நிறைந்ததும, குணத்தில் விசேஷித்ததுமான இத்தைலம் பித்ததேகிகளுக்கும், அதிசூடான தேகிகட்கும் மாத்திரமல்ல உட்காய்ச்சல், அஸ்தி சுரம், கணைக்காய்ச்சல், தலைக்கொதி கண்ணெரிவு, பித்தமயக்கம், தேகவெளுப்பு, சோகை முதலிய நோய்களையும் மாற்றும்
12 அவுன்ஸ் விலை ரூபா 2—25.

### பரிமள கூந்தல் தைலம்.

இது மயிர் அதிகமாக வளர்தற்கும் பெண்களுக்கு அழகு பயக்கும் கருங்கூந்தல் செழிவதற்கும் இன்றியமையாதது. தலையிலும் கண்களிலும் வரக்கூடிய சொறிவு, எரிவுகளைப் போக்கவல்லது. மண்டைக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும், முகத்திற்கு அழகும் வசீகரணமும் அளிக்கும். போத்தில் விலை ரூ. —1-00.

### சஞ்சீவித் தைலம்.

வெளிப்பிரயோகமாகவே சன்னி, வலிப்பு, வாதம், சுவாசகாசம், இருமல், தலையிடி, வயிற்றுவலி, புதிய காயங்கள், நோவு, முறிவு, நெரிவு, வீக்கம், விரணம், மூலமுளை, படர்தாமரை மற்றும் எவ்வித நோய்களையும் மாற்றும். விலை சதம்—50.

மகா கோரோசனை மாத்திரை விலை சதம் 75.
இராஜரிஷி சஞ்சீவி மாத்திரை விலை சதம் 60.

தலைமை வைத்தியசாலை,
மணிக்கூட்டுத்தெரு யாழ்ப்பாணம்.

கிளை வைத்தியசாலை,
101. பெரியதெரு யாழ்ப்பாணமும்,
மன்னார், நெல்லியடி.

(Y 69. 18-6-34 to 17-6-35.)



காலத்துக்குத்தக்க மலிவுவிலை!

# மங்களூர் ஓட்டுக் கம்பேனி.

மிலிற்றறி, கவர்மென்ட், முனிசிப்பல் கொந்திருத்துக்காரர்.

மோர்க்கன் ஓடு, 1931 தொடக்கம் வருஷக் கொந்திருத்தாய் கவர்ன்மென்டுக்குக் கொடுக்கப்பெற்று வருகின்றது.

வேறு எந்த ஓட்டிலும் இல்லாத இரண்டு வரைகள் மோர்க்கன் ஓட்டில் இருக்கின்றன. இவை அடைமழைக்கும் ஓட்டைக் கசியவிடாது காத்துக்கொள்ளும்.

க. சே. த. சே. செல்லையாபிள்ளை,
316ம் நி-ர் கிட்டங்கித்தெரு, யாழ்ப்பாணம்.

பல இடங்களுக்கும்போய், எங்கள் ஓடுகளை விற்க ஏஜென்றுமாராய் சுன்னாகம் இ. தாமோதரம்பிள்ளையும் கச்சேரியடி கிழக்கு, நாகரத்தினம்ரோட்டு, போ. தம்புவும் நியமிக்கப்பெற்றிருக்கின்றார்கள்.

(Y 41. 21-5-34 to 20-5-35.)


பிறர்க்கின்னா முற்பகல் செய்யிற் றமக்கின்னா பிற்பகற்றானே வரும்


## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்லிலி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம, வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகை வகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு. பீனிசம், கைகால் எரிதல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டு வந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரை ரூத்தலுக்கு ரூபா பத்து கால் ரூத்தலுக்கு ரூபா ரு. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததனால் முன் மணிஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
செலுான் ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு.

(Y. 17 1-11-34 to 31-12-35) வலோ

# "யாழ்ப்பாணத்தில் முன்னொருபோதும் நடவாத களவுமுறை."

## "இதனை முளையிற்றானே கழைந்து விடல் வேண்டும்"

### மோட்டாரதமூலமாக வழிபறி திருடர்.

"இந்த விதமான களவு யாழ்ப்பாணத்தில் முன்னொருபோதும் நடந்ததில்லை; இது அமரிக்காவிலுள்ள திருடர் கைக்கொண்டுள்ள ஒரு முறையாகும். இதிற் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைக் கடுமையாகத் தண்டித்து இதனை முளையிலேயே கழைந்து விடுதல் வேண்டும். உண்மையாக இது மிகவும் அடாத்தும் துணிகரமுமான செயல்" என, யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நீதிபதியாகிய ஸ்ரீ. C. குமாரசுவாமியவர்கள் கீழே சொல்லப்படும் வழக்கில் தீர்ப்புச்சொல்லும்போது கூறினார்:

இவ்வழக்கில், சண்டிருப்பாயைச் சேர்ந்தவர்களாகிய கோபாலு கந்தையா, சின்னத்தம்பி மயில்வாகனம், வைரவன் சின்னவன், என்னும் மூவர் ஒரு மோட்டார் வண்டியிற் புறப்பட்டு இடங்கள்தோறுஞ் சென்று, ஆரலியில் நாகமுத்து பெண் பொன்னுசியினுடைய தாலிக்கொடியையும் காங்கேசன்துறையில் வைரவிப்பிள்ளை பெண் கதிராசியின் கழுத்திலிருந்த தாலிக்கொடியையும், பருத்தித்துறையில் கதிரிப்பிள்ளை பெண் தங்கச்சிப்பிள்ளையின் தாலிக்கொடியையும் அறுத்துச்சென்றார்களெனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர்.

இராமு—செல்லமுத்து சொன்ன சாட்சியம்.

"மேலே சொல்லப்பட்ட குற்றவாளிகள் மூவரும் இருந்த மோட்டாரதத்தில் நானும் ஏறிக்கொண்டு சண்டிருப்பாயிலிருந்து புறப்பட்டு காவற்குழிக்குப்போனோம்; கந்தையா என்பவர் காவற்குழியில் ஒரு இழவு வீட்டிற்குப் போகவேண்டுமென்றும் தாமே காருக்கு எண்ணெய் வாங்கித் தருவதாகவும் சொல்லியிருந்தார்; இரண்டாம் எதிரியாகிய மயில்வாகனமே வண்டியைச் செலுத்தியவர்; காவற்குழிக்குப் போகும் மார்க்கத்திலே கந்தையா ஒரு தென்னந் தோட்டத்திற் கணித்தாகக் காரை நிறுத்தச்சொன்னார். கந்தையா உடனே இறங்கிச் சிறிது தூரம் நடந்துபோய் நின்று கொண்டு காரைக் கொண்டுவரும்படி சைகை காட்டினார். அந்தச் சமையத்தில் ஒரு மனுஷி அங்கே வர, கந்தையா அவளுடைய தாலிக்கொடியைப் பிடுங்கிக்கொண்டு ஓடிவந்து காரில் ஏறிவிட்டார். சின்னையாவும் அவருடன் போய் மீண்டுவந்தார். மனுஷி ஓலமிட்டபோது கந்தையா காரை வேகமாகச் செலுத்தச் சொன்னார். இதனைக் கண்டவர்கள் இரண்டுபேர் ரதத்தைத் தடுக்கலாமென்று ஓடிவந்தார்கள், கந்தையா நிறுத்தவேண்டாமென்று சொன்னபடியால் அவர்கள் ஓடிவந்து பிடிக்க முடியவில்லை. பின்பு ஆரலிக்கு வந்தோம்; கந்தையா காரை நிறுத்தச்சொல்லி உடனே சின்னவனோடு இறங்கினார். வயலில் ஒரு மனுஷி நிற்பதைக் கண்டு இருவருமாகப் போனார்கள். கந்தையா மனுஷியின் கழுத்திலிருந்த ஏதோ ஒன்றைப் பிடுங்குவதைக் கண்டேன். பின்பு அவ்விருவரும் ஓடிவந்து காரில் ஏறிக்கொண்டு வேகமாகக் காரை ஓட்டச் சொன்னார். பிடுங்கிய பொருளை மடியுட் கந்தையா வைத்தபோது நாங்கள் என்ன? என்று கேட்க ஒரு தாலிக்கொடி யென்று சொன்னார்.

அதன்பின் கீரிமலை மார்க்கமாகப் போனோம். வழியில், கந்தையா தன் சால்வையைப் போட்டுவிட்டு அதை எடுப்பதற்காகக் காரை மறிக்கச் சொன்னார். மறித்தபின் இறங்கிச் சால்வையை எடுக்கப் போகும்போது ஒரு மனுஷி அந்த மார்க்கமாக வர அவளுடைய தாலிக்கொடியைப் பிடுங்கிக்கொண்டு காரில் ஓடி வந்து ஏறி அதனை வேகமாகச் செலுத்தச் சொன்னார்.

அதன் பின் பருத்தித்துறை மார்க்கமாகப் போய் நெல்லியடிப் பக்கமாகத் திருப்பினோம். தனக்காரக் குறிச்சியில் வரும்போது கந்தையா காரை நிறுத்தச் சொல்லிவிட்டு இறங்கிக் காரின் பின்புறமாக ஓடிப்போனார். "ஐயோ என் கொடியை ஆரோ பிடுங்கிக்கொண்டு ஓடுகிறான்" என்று ஒரு மனுஷி சத்தமிடக் கேட்டோம். இதற்கிடையில் கந்தையா ஓடிவந்து காரில் ஏறிக்கொண்டு அதனை வேகமாகச் செலுத்தச்சொன்னார். அதன்பின் சுன்னாக மார்க்கமாக வந்து கந்தரோடைக்குப் போனவுடனே கந்தையாவும் சின்னவனும் இறங்கிப்போய்விட்டார்கள். திருடப்பட்ட நகைகளெல்லாம் கந்தையாவே கொண்டு போனான். நான் சண்டிருப்பாய்க்குப் போய்விட்டேன்.

முதலாம் எதிரி சாதியில் மேளகாரன்; தொழில் கமம். இரண்டாமெதிரி வேளாளன்; மூன்றாமெதிரி கழுகன் எதிரிகள் மூன்றுபேரும் காவற்குழியிற் கள்ளுக் குடித்தார்கள்.

பொன்னுச்சி சொன்ன சாட்சியம்.

குறித்த தினத்தன்று நான் ஆரலியில் பகல் 10 மணிவரையில் வயலிலே புல்லுச் செதுக்கிக்கொண்டிருந்தேன்; நான் இருக்கிற இடத்துக்கு நேராக, தெருவில் ஒரு கார் வேகமாக வந்து நின்றது. முதலாம் எதிரியும் மூன்றாமெதிரியும் இறங்கி எனக்குச் சமீபமாக வந்தார்கள். மூன்றாமெதிரியன் கையில் ஒரு வாள் இருந்தது, முதலெதிரி தாலிக்கொடியை அவிழ்த்துத் தரச் சொல்லி என்னைக் கேட்டான். நான் மறுத்து என் தாலிக்கொடியை இரண்டு கையாலும் பொத்திப் பிடித்துக் கொண்டேன்; மூன்றாமெதிரி "தாலிக்கொடியை நீ தாராவிட்டால் உன்னை வெட்டி இந்த வயலுக்குட் புதைத்து விடுவேன்" என்று வாளைக்காட்டி அச்சுறுத்திக் கொண்டு என்னை அமுக்கிப்பிடித்துக்கொள்ள, முதலாமெதிரி என கொடியை அறுத்தான். இருவருமாக ஓடிப்போய்க் காரிலேற கார் வேகமாக ஓடியது. நான் "ஐயோ" என்று கத்திக்கொண்டு நின்றேன். கொடி 250 ரூபா பெறுமதியானது.

கதிராசி சொன்ன சாட்சியம்.

"நான் காங்கேயன்துறைத் தெருமார்க்கமாகத் திரும்பிவரும்போது ஒரு மோட்டார்வண்டி என்னெதிரில் வந்து உடனே நின்றுவிட்டது. ஒரு தென்னந்தோப்பிறகுப்பக்கத்தில் அந்தக்காரிலிருந்து ஒரு சால்வை விழுந்தது முதலாமெதிரி இறங்கி என்பக்கத்தில் விழுந்துகிடந்த சால்வையை எடுத்தான் நான் மறுபக்கமாக ஒதுங்கினேன். இந்தமுதலாமெதிரி என தாலிக்கொடியை எட்டிப் பிடுங்கினான். நான் கத்தினேன், அவன் உடனே ஓடிப்போய்க் காரில்ஏற கார் வேகமாகஓடினது. நான்பிறகு மணியகாரனிடம் போய் முறையிட்டேன். எனக்கு கழுத்திற்காயமுண்டு.

தங்கச்சிப்பிள்ளை சொன்னசாட்சியம்.

"எனக்குவயசு 70 நான் செத்தல் மிளகாயும் தேங்காயுங் கொண்டு சந்தைக்குப் போகும் மார்க்கத்தில் எனக்குப் பிறகே வேகமாகவந்த ஒரு மோட்டார் வண்டி என்னை விலத்திப்போய் முன்னுக்கு நின்றது. முதலாமெதிரி இறங்கியோடிவந்து என்னைத்தள்ளிவிழுத்திவிட்டுத் தாலிக்கொடியைப் பிடுங்கினான். நான் கத்தினேன் இதற்கிடையில் கார்போய் மறைந்துவிட்டது. தாலிக்கொடியின் பெறுமதி 120 ரூபா.

வேறும் சில சாட்சிகளை விசாரணை செய்தபின் நீதிபதி மூவரையும் குற்றவாளிகளெனக்கண்டு அவர்களுக்குத் தனித்தனி 4 வருடக் கடுஞ் சிறைவிதித்தார்.

இந்தத் திருடர் மூவருக்கும் விரோதமாக யாழ்ப்பாணம் போலிஸ்கோட்டிற் பின்னரும் ஒரு வழக்குத் தொடரப்பட்டது. அதனை நீதிபதி ஸ்ரீ ஆழ்வாப்பிள்ளையவர்கள் விளங்கினார். அப்பொழுது சின்னப்பிள்ளை சொன்ன சாட்சியம்.

"குறித்த தினத்தன்று நான் காய்பிஞ்சுச் சாமான் கொண்டு யாழ்ப்பாணம் பெரிய கடைக்குப் போனேன். காவற்குழித் தெருவில் ஒரு தென்னந்தோட்டத்திற்குப் பக்கமாக ஒரு மோட்டக்கார் நிற்கக் கண்டேன் அந்தக்காரில் மூன்றுபேர் இருந்தார்கள். முதலாமெதிரி ஒரு மதகின் பக்கத்தே இருந்தான். நான் போக என்னைத் தொடர்ந்துவந்து தலையிலிருந்த பெட்டியைத் தள்ளிவிட்டுத் தாலிக்கொடியிற் பிடிக்க அது முறிந்து கீழே விழுந்தது. நான் அதைக் குனிந்து எடுக்க முந்தி அவன் என்னைத் தள்ளிவிழுத்திவிட்டுத் தாலிக்கொடியைத் தானே எடுத்துக்கொண்டு ஓடிப்போய்க் காரில் ஏறிவிட்டான். கார் மெத்த வேகமாகப் போனது. தாலிக்கொடி 150 ரூபா பெறுமதியானது நான் ஓலமிட மன்னவராயர் காரில் ஓடிவந்தார். அவர் என்னைத் தன் காரில் ஏற்றி காவற்குழி புகைரதஸ்தான அதிபரிடம்விட நான் அவருக்கு முறையிட்டேன்".

ஸ்ரீ R. C. மன்னவராயன் சொன்னவை.

"சொல்லப்பட்ட என் தென்னந்தோட்டத்தில் இருந்தநான் ஒரு பெண் ஓலமிடுவதைக்கேட்டுத் தெருவுக்கு ஓடிப்போனேன்; அங்கே ஒரு கார் மிகவேகமாக ஓடிப்போவதைக் கண்டேன்; ஓலமிடும்பெண்ணைக் கார் தட்டி விழுத்தி விட்டதென நான் நினைத்து மிகவேகமாய் ஓடிப்போய்க் காரை நிற்பாட்டச்சொன்னேன்! அவர்கள்நிற்பாட்டவில்லை. காருக்கு எதிராக வந்தவர்கள் சிலருக்கு காரைத் தடுங்கள்! தடுங்கள்! என்று சத்தமிட்டேன். அவர்கள் தடுக்க முயன்றபோது சேறுதாங்கிமேல் இருந்த ஒருவன் வாழ் நீட்டிக்காட்டி அவர்களை வெருட்டினான் காரின் இலக்கம் D 2448. என்பதை மாத்திரம் நான் அவதானித்துக் கொண்டேன் மீண்டு வந்துஎன்னுடைய ரதத்தில் அந்த மனுஷியை ஏற்றிக்கொண்டு காவற்குழிப் புகையிரத ஸ்தானத்திற்குப் போய் நான் அதிபருக்குச் சமாசாரத்தைச் சொல்லி உடனே யாழ்ப்பாணம் பொலிஸ்தானத்திற்கு விஷயத்தைத் தெலிபோன் மூலமாகத் தெரிவிக்கும்படி அவரைக் கேட்டேன்; அவர் அப்படியே செய்தார். பின்பு பொலிசார் குறித்த காரையும் திருடர்களையும் அகப்படுத்தினரென்று அறிந்தேன்"

விசாரணையின்பின் நீதிவான் மூவரையும் குற்றவாளியெனக்கண்டு அவர்களுக்குத் தனித்தனி 6 மாசக் கடுஞ்சிறை விதித்தார். காரும் பறிமுதலாகட்டும் எனத் தீர்ப்புச்செய்தார்.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கடுமையான காய்ச்சற் காரருக்கு அதாவது மருந்து உட்கொள்ள முடியாத ஒயா உவாந்திபிருக்கக்கண்டால் உடனே வைத்தியரை அழைப்பித்துக் காண்பித்து குயினையின் மருந்தை ஊசி மூலமாய்க் ஏற்றிவிட வேண்டும். காட்டுக்காய்ச்சலுக்குச் செய்துகொள்ளவேண்டிய சிகிச்சைக்குரிய சில ஒழுக்கமான விதிகளை இங்கே குறிப்பிடுகிறோம்:—

(1) காய்ச்சல் உண்டுபட்டிருக்கும் பொழுது படுக்கையிலிருந்து கொள்ள வேண்டும். காய்ச்சலிருக்கும்பொழுது இது என்னசெய்யுமென்று வெளியில் உலாவித்திரிதல் பெரும் பிழையானகாரியம்.

(2) உடம்பு குளிர்ந்து கொண்டிருக்கையில் கம்பளிப் போர்வைகள், சுடுதண்ணீர்ப் போத்தல்கள், இலேசான சூடான பானங்கள் முதலியவற்றை உபயோகித்துக் காங்கையாக்கிக் கொள்ளவேண்டும். மஸ்துப்பதார்த்தங்களை விலக்கிக் கொள்ள வேண்டும்

(3) உடம்பு காங்கையாயிருக்கும் நிலைமையில் மேற்போர்வைகளைக் குறைத்துக் குளிர்மையான பானவகைகளை அதிகமாய்ப் பருகவேவண்டும்.

(4) வெயர்வை உண்டாகி மாறின பிற்பாடு உடைகளைக் கழற்றி வேறு காய்ந்து உலர்ந்த உடைகளைத் தரித்துக் கொள்ளவேண்டும்.

(5) காய்ச்சலிருக்கும் பொழுது இலேசான தண்ணீர்ச் சாப்பாடுகளைத்தான் சாப்பிட்டுக் கொள்ளவேண்டும். மெல்லிய காய்ச்சலிருந்தால் வழக்கமான உணவுகளைச் சாப்பிடக்கொள்ளலாம்.

(6) காய்ச்சல் இன்னுமிருக்கும்பொழுது வேலைக்குப்போகவேண்டாம்.

(7) மஸ்துப்பதார்த்தங்கள், அளவுகடந்த ஆயாசம், இலேசாய்ச் சமிக்காத உணவுகள், கடுமையான தேகப்பிரயாசம் முதலியவற்றைக் குறைந்தது இரண்டு மாசங்கள் வரையிலாவது தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

(8) காய்ச்சல் விட்டு நீங்கிய பிற்பாடு பெலன் தரக்கூடிய மருந்துகள் பால் முதலியவற்றை உபயோகித்து உடம்பைத் திருத்திக்கொள்ளவேண்டும். நல்ல ஆரோக்கியத்தைத் தரக்கூடிய போசனங்களையும் பழக்க வழக்கங்களையும் அனுசரித்துக் கொள்ளவேண்டும்.

(9) குயினையின் மருந்தை எல்லா ஆசுபத்திரிகளிலும் மருந்துச் சாலைகளிலும் சிகிச்சை செய்யும் விசேஷ ஸ்தாபனங்களிலும் இலவசமாய்ப் பெற்றுக் கொள்ளலாம்.


## தேவை.

மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ்ப் கலவன்பாடசாலைக்கு தராதரப்பத்திரமுடன் அனுபவமுள்ள ஒரு தலைமை உபாத்தியாயர் தேவை.

சைவசமயியா யிருத்தல் வேண்டும். விண்ணப்பபத்திரம் அனுப்புவோர் நற்சாட்சிப்பத்திரங்களுடன் 1935ஆ மேமீ 10ந் திகதிக்குள்

X. C/o இந்துசாதனத்திற்கு,
(Hindu Organ)
அனுப்புக.

(Mis 29. 25&29-4-35.)

## தேவை.

கொடிகாமம் றெயில்வே ஸ்ரேசனுக்குக் கிட்ட இருக்கும் கட்டைபறித்தான் பிள்ளையார் கோவிலில் இப்போது இருக்கும் ஐயர் தகப்பனுடைய வருத்தத்தினால் வேலையை விடுகிறார். இன்னொரு பிராமணப் பூசகர் தமிழ் வைகாசிமீ முதலாம் திகதி தொடங்கி தேவை. காளாந்தரம் காலமே ஒருபடி அரிசி நெய்வேத்தியத்துடனும் சாயந்தரம் பழம் பாக்கு வெற்றிலையுடனும் இரண்டு காலப் பூசை. தினப்படி பூசகர் பொறுப்பு. சம்பளம் மாசம் பதினேழரை ரூபா. இரவும் பகலும் கோவிலில் இருக்கவேண்டும். உடனே எழுதவும்.

செ. சி. குமாரசாமி,
விரிந்தாவனம்
(15-4-35) கொடிகாமம்.
(Mis 30. 25-4-35)

## கோட்டு விற்பனவு விளம்பரம்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்.

இல. 8537.

வண்ணார்பண்ணை கிழக்கிலிருந்து காலஞ்சென்ற சிவசிதம்பரஞ்செட்டியார் முத்தையாச்செட்டியாரின் ஆதனத்தின் தத்துவகாரி வண்கிழக்கு முத்தையாச் செட்டியார் கைம்பெண் பராசத்திஅம்மா அல்லது பொன்னம்மா.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் 8537-ம் இலக்கத் தத்துவவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் அசைவுள்ள பொருட்களை 1935-ம் ஆண்டு சித்திரை மீ 27-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு விறாந்தையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

(1) இரும்புப் பெட்டகம் 1
(2) முத்துப் பென்டன் 1
(3) சரிச்சிகப்புத் தோடு சோடி 1
(4) இரண்டு சிகப்புக்கல் பதித்த பவுண் மோதிரம் 1
(5) சிகப்புக்கல் பதித்த பென்டன் 3
(6) கலவாழி சோடி 2
(7) முத்துப் பென்டன் 1
(8) சிகப்பு பச்சைக்கல் முத்துப்பதித்த பென்டன் 1
(9) இமிற்றேசன் வைரப் பென்டன் 1
(10) இமிற்றேசன் வைரத்தோடு சோடி 1
(11) டிம்பி வேலை செய்ய மெழுகுகட்டையிற் பதித்த கட்டை 3
(12) சவுகதோர் 2
(13) இமிற்றேசன் டிம்பி பதக்கம் 1
(14) குச்சப் பென்டன் 1
(15) இமிற்றேசன் காதுக்குச்சி சோடி 1
(16) சிறம் காதுக்குச்சி சோடி 1
(17) இமிற்றேசன் வெள்ளைக்கல் பென்டன் 1
(18) இமிற்றேசன் சிகப்பு பச்சைக்கல் பென்டன் 1
(19) இமிற்றேசன் காதோலை சோடி 2
(20) இமிற்றேசன் மூக்குத்தி 1
(21) வெறும் பெட்டிகள் 13
(22) அரைத் தங்கப்பவுண் 2
(23) பவுண் சட்டைப் பொத்தான் 3
(24) கடுக்கன் சோடி 1
(25) பவுண் நூல்
(26) முகப்பு 2
(27) பவுண் சங்கிலி 1
(28) 2 அண்டு சங்கிலியும், காப்பு 1ம்
(29) உருக்கின பவுண் விராகன் 10½
(30) ஜெர்மன் வெள்ளிச் சங்கிலி 2
(31) ரூபா 72 பெறுமதியான வெள்ளி நகைகள்
(32) அட்டியல் 1 காப்பு சோடி 1 கொண்டைக் கூர் 1
(33) இமிற் வைரத் தோடுகள் சோடி 3
(34) இமிற் சிகப்புக்கல் தோடு சோடி 3
(35) மூக்குக்குச்சி சோடி 1
(36) சின்னு 1
(37) மூக்குக் கண்ணாடியும் கூடும் 1
(38) டிம்பி 3
(39) உடைந்த கல்லுகள் அடங்கிய பாக்கேச் 1

இன்னும் பல நகைகளும் சாமான்களும் விற்கப்படும்.

வி. ஐயம்பிள்ளை உடையார்
யாழ்ப்பாணம், கொம்மிஷனர்,
23—4—35.

(Mis 24 25-4-35.)

## திருநெல்வேலி ஒற்றுமை நிதி.

( வரையுளது )

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா **500,000.**

ஒரு பங்கு 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்.

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றன.
வேண்டிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.
தேசிய கருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெற முடியும். ஆதலால்,
முதலை வளர்த்து சேவை டளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்
நோக்கங்கொண்ட இந்நிதியை ஆதரியுங்கள்!
இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தலைணக்கும்
நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், நடைசகணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!!
கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருளும்
சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளுவோம்.

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(Y. 137. 1-11-34 to 31-10 35.) வி.


நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893ம் ஆண்டின் 9ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்ற அடைவுபிடிக்கும் தொண்டைமானாறு சின்னத்தம்பி இராமசாமியிடம் தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1932 ஆ ஆடி மீ
நம்பர் ரூபா சதம்
A 2152 6 சி தம்பையா செருடாவில் ஒற்றைநாக்கல் தோடு சோடி 1
1932 ஆ ஆவணி மீ
2257 10 சி இராமலிங்கம் கீரிமலைகாடு சற்தோடு சோடி 1
1932 ஆ புரட்டாதி மீ
2465 65 அ சந்திரசேகரம் தொண்டைமானாறு மெழுகுகாப்பு சோடி 1 சற்தோடு சோடி 1 வாளி சோடி 1 மோதிரம் 1 மின்னி 1 உன்கட்டு 1
2471 14 சி செல்லம்மா உடுப்பிட்டி சற்தோடு சோடி 1
1932 ஆ கார்த்திகை மீ
2662 20 வீ பொன்னையா உடுப்பிட்டி சற்தோடு சோடி 1
2679 70 ஆ கந்தசாமி செருடாவில் பீலிக்காப்பு சோடி 1
2693 16 வீ பொன்னையா உடுப்பிட்டி கல்மோதிரம் 1
1932 ஆ மார்கழி மீ
2799 35 இ கந்தசாமி உடுப்பிட்டி சம்பிப்பூராணட்டியல் 1 (மூளிக்கது)
1933 ஆ தை மீ
2864 15 மயில் இலட்சுமி சீனாசதவை சற்தோடு சோடி 1
2929 70 இ சிவகுராசா வல்வெட்டித்துறை நெல்லிக்காப்பு சோடி 1 சங்கிலி 1
1933 ஆண்டு மாசி மீ
2975 50 கதிரன் தங்கம் மண்ணுச்சிலைல் கம்பிப்பூராணட்டியல் 1
3033 10 ஆ கந்தசாமி செருடாவில் அச்சரம் 1
1933 ஆண்டு பங்குனி மீ
3055 70 வேலுப்பிள்ளை இளையதம்பி பத்தைமேனி மெழுகுகாப்பு சோடி 1
3087 220 ஆ செல்லத்துரை செருடாவில் மொழுகுகாப்பு சோடி 1 முறிச்சிக்குறி அட்டியல் 1 சங்கிலி 1
1933 ஆண்டு வைகாசி மீ
3206 30 சி சின்னத்தம்பி வல்வெட்டித்துறை கைச் சங்கிலி 1
3220 20 பொ பாறுவதி உடுப்பிட்டி சற்தோடு சோடி 1
3242 12 சி சர்வையா வல்வெட்டித்துறை கைச் சங்கிலி 1
1933 ஆண்டு ஆனி மீ
3333 13 சி கந்தர் உடுப்பிட்டி சற்தோடு சோடி 1
1933 ஆண்டு ஆடி மீ
3397 12 க இளையதம்பி செருடாவில் சற்தோடு சோடி 1
1933 ஆண்டு ஆவணி மீ
3492 15 மு செல்லையா உடுப்பிட்டி புரோச் 1
3496 165 ம. ஏகாம்பரம் வல்வெட்டி செட்டிப்பூராணட்டியல்
1933 ஆண்டு புரட்டாதி மீ
3602 10 கு தம்பிமுத்து உடுப்பிட்டி கடுக்கன்சோடி 1
3617 10 க சின்னத்துரை உடுப்பிட்டி காட்டுக்கடுக்கன் சோடி 1
1933 ஆண்டு ஐப்பசி மீ
3638 8 கா கந்தசாமி வழலாய் குலைச்கடுக்கன் சோடி 1
3644 46 51 வே இலட்சுமி செட்டியளூர் செட்டிச்சொலிக சோடி 1
3664 15 இராமன் குட்டி காபாறுவை அச்சரம் 1
3690 104 54 க இரத்தின ஐயர் செருடாவில் உருத்திராட்சக் கொ 1
3694 10 ஆ செல்லத்துரை செருடாவில் சற்தோடு சோடி 1
1933 ஆண்டு கார்த்திகை மீ
3713 15 செ திருமஞ்சனம் செருடாவில சற்தோடு சோடி 1
1933 ஆண்டு ஐப்பசி மாதம்
3691 179 ஆறுமுகம் காப்பு பத்தைமேனி சங்கிலிக்காவில் கொடி 1
3694 10 ஆறுமுகம் செல்லத்துரை செருடாவில் சற்தோடு சோடி 1
1933 ஆண்டு கார்த்திகை மீ
3728 35 சி கந்தர் உடுப்பிட்டி அச்சரம் 1
3732 32 84 குட்டி டம்பன் செருடாவில் அச்சரம் 1
3803 12 00 செ. முத்துலிங்கம், வல்வெட்டித்துறை வைத்தோடு 1
3830 10 குட்டி தம்பன் செருடாவில்குலைக்கடுக்கன் சோடி 1
3756 75 சின்னன் கந்தி கம்பாறுவை முறிச்சக்குத்தி அட்டியல் 1
1933 ஆண்டு மார்கழி மீ
3833 10 கதிரன் கோணன் கரிப்பாய் காட்டுக் கடுக்கன் சோடி 1
3846 18 வ. சிரிப்பிள்ளை பத்தைமேனி மோதிரம் 1
1934 ஆண்டு தை மீ
3863 25 ஆ காங்கேசு தம்பாவை பவுண் வேலை செய்தது 1
3869 12 சி பொன்னையா செருடாவில் அச்சரக்கூடு 1
3879 45 79 மா செயரத்தினம் தொண்டைமானாறு கம்பிப்பூராணட்டியல் 1
3886 6 மாணிக்கம் அம்மா தொண்டைமானாறு வாளி சோடி 1
3887 126 60 சி வெங்கடாசலம் வல்வெட்டித்துறை பீலிக்காப்புச் சோடி 1 ½ மோறு 1
3890 100 ஆ சின்னத்தம்பி உடுப்பிட்டி முறிச்சக்குத்தி அட்டியல் 1
3900 10 சி கதிரான் உடுப்பிட்டி மூன்றுகல் தோடு சோடி 1
3914 8 18 வே காசமுத்து உடுப்பிட்டி கடுக்கன் சோடி 1

விற்பனவு யுவ வருஷம் சித்திரை மீ 22 ந் திகதிக்குச் சரியான (5-5 35) ஞாயிற்றுக்கிழமை 10 மணி தொடக்கம் மேற்படியார் வீட்டில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

கா. முத்துக்குமாரு ஐயர்
வெர்தீக மேன்தர்

(Mis 18 14 25 4-35)

## தாயும் பிள்ளையும்.

ச. இராசரத்தினம் எழுதியது.

இலங்கை வைத்தியக் கல்லூரி மருத்துவ ஆசிரியரும், கொழும்பு பிரசவ வைத்தியசாலைப் பிரதம வைத்தியருமாகிய **Dr. S. L.** நவரத்தினம் அவர்கள் எழுதிய முகவுரையைக் கொண்டது. "வீரகேசரி", "சோதிடபரிபாலினி", "வர்த்தக ஊழியன்" முதலிய பிரபல பத்திரிகைகளின் மதிப்புரைகளைப் பெற்றது.

1 "........பெண்மக்கள் கர்ப்பமாயிருக்குங் காலத்திலும், பிரசவ காலத்திலும், பின்னரும் நடந்து கொள்ளவேண்டிய முறைகளையும், இன்னோரன்ன அரிய விஷயங்களையும் நுட்பமாகஎடுத்து விளக்குவது: தமிழில் முதன்முதல் இவ்விஷயமாக வெளிவந்தநூல் இதுவேயாகும்." இந்துசாதனம்.

2: "........ஒவ்வொரு குடும்பத்திலும் கைவசமிருக்கவேண்டியது அவசியமாகும்" ஈழகேசரி. விலை சதம் 50.

கிடைக்குமிடங்களுட் சில.

(1) சைவப்பிரகாச யந்திரசாலை, யாழ்ப்பாணம்.
(2) சண்முகநாதன் புத்தகசாலை, ,, ,,
(3) **Leela Stores 249, Norris Road, Colombo.**
(4) **Naveena Katha Book Depot, Montgomery Street, Rangoon.**
(5) **Messrs. Seenicutty and Co Treacher Street, Ipoh.**

(Mis 212. 21-3 to 20-5-35.) (சி)


## பவுண்மார்க் ஓடுகள்.

மலிவு நிறைந்த / பொலிவு நிறைந்த
அழகு மிக்க / புகழ்வு மிக்க
ஓசை கொண்ட / உயர்வு கண்ட
கனங் குறைந்த / சாய்வு தந்த
கசிவில்லாத / சூடு கொள்ளாத
பவுண்மார்க் / ஓடுகள் இவைகளே.

இவை எம்மிடமன்றி வேறெவரிடத்தும் கிடைக்காதன வென்பதை மறவாதீர்.

தனிஏசண்டு: சி. வீரகத்திப்பிள்ளை அண்டு சன்ஸ்
யாழ்ப்பாணம், பருத்தித்துறை,
வல்வெட்டித்துறை, காங்கேயன்துறை.
சப் ஏசண்டுகள்: சி. க. ஆறுமுகம்பிள்ளை, காரைநகர்.
பி. ம. தம்பிஐயா, ஊர்காவற்றுறை.

**N. B.** மேற்குறித்த இடங்களில் மேற்குறித்த ஆட்களிடமே பெறலாம்.
மற்றெவரிடத்தும் இந்த ஓடுகள் இல்லை.

**Phone No 93.**

(Y. 27. 1-5-34 to 30-4-35)



விளம்பரம்.

# M. S. M. A. & Co.

## பாடிப்பேட்டை திறம் சேலைகள்.

எங்களிடத்தில் தற்கால நாகரீகத்துக்கேற்ற புதுமாதிரியான
கெட்டிச் சாயமுள்ள பாடிப்பேட்டைச் சேலைகள்
விற்பனைக்கிருக்கின்றன.

சாயத்திற்கு உத்தரவாதம்! விலை சகாயம்!

முக்கிய கவனிப்பு:
எங்கள் பாடிப்பேட்டைச் சேலைகள் போலவே
போலிச் சேலைகளும் விற்பனையாகின்றன.
அவைகளை வாங்கி எங்கள்பேரில் குறைகூறுதீர்கள்.

தாங்கள் சேலைகள் வாங்கும்போது,
ஸ்ரீ வெங்கடேஸ்பர, 'ட்றேட்மார்க்'கும்,
**M. S. M. A.** அடையாளமுமுள்ள சேலைகளையே
பார்த்து வாங்குங்கள்.

M. S. M. A. அண்டு கம்பனி,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

தலைமை ஆபீஸ்: பாடிப்பேட்டை, திருப்பதி **P. O.**
கிளை ஆபீஸ்: கொப்படி அம்மன்கோயில் தெரு காரைக்குடி.

(Mis. 213. 21-3- to 26-4-35.)


வான்முகில்வழாதுபெய்க மலிவளஞ்சுரக்கமன்னன், கோன்முறையாகுசெய்க குறைவிலாதுயிர்கள்வாழ்க,
நான்மறையறங்களோங்க நற்றவம்வேள்விமல்க, மேன்மைகொள்சைவநீதி விளங்குகவுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on the behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna at their Press, Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on THURSDAY the 25TH APRIL 1935.